விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.



Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 27 செவ்வாய்க்கிழமை (13.10.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 299

நாணயத்தாள்கள், கையடக்கத் தொலைபேசிகளில்

## 28 நாட்கள்வரை தொடர்ந்து கொரோனா உயிருடன் இருக்கும்

புதிய ஆய்வில் கண்டுபிடிப்பு

(கான்பெரா)

கொரோனா வைரஸ் நாணயத்தாள்கள், கையடக்கத் தொலைபேசியின் திரை மற்றும் துருப்பிடிகாத உலோகங்களில் 28 நாட்கள் வரை 23

வயோதிப தம்பதிகளை கட்டிவைத்துவிட்டு


## 15 பவுண் நகைகள் கொடிகாமத்தில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கச்சாய் பகுதியில் 15 பவுண் நகை மற்றும் பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள் 24

வவுனியாவைச் சேர்ந்த

## 4 வயது சிறுவன் லண்டன் விபத்தில் உயிரிழப்பு



23

சர்வாதிகார ஆட்சியை அனுமதிக்க முடியாது

# 20 ஆவது திருத்தச் சட்டம் ஜனநாயகத்துக்கு ஆபத்து

## அரசுக்கு எதிராக மகா சங்கத்தினர் போர்க்கொடி

(கொழும்பு)

**20ஆவது திருத்தம் மூலம் சர்வாதிகார ஆட்சி உருவாகும். இது ஜனநாயகத்துக்கு மிகவும் ஆபத்தானது. இதனை நிறைவேற்ற விடமாட்டோம் என அரசுக்கு எதிராக மகா சங்கத்தினர் போர்க்கொடி உயர்த்தியுள்ளனர்.**

அமரபுர நிகாயா மகா சங்கம், ராமஞ்ஞா நிகாயா மகா சங்கம் மற்றும் இலங்கை அமரபுர ராமஞ்ஞா சாமக்ரி சங்க சபை ஆகியனவே 20ஆவது திருத்தத்தை நிறைவேற்ற வேண்டாம் என்று வலியுறுத்தியுள்ளன.

பல பலவீனங்களைக் கொண்ட அரசியலமைப்பில் முன்மொழியப்பட்ட 20ஆவது திருத்தச் சட்ட வரைபை நிறைவேற்ற வேண்டாம் என்று 23



இயக்கச்சியில்

## 6 பேருக்கு தொற்று உறுதி

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் போதனா வைத்திய 23

## 116 கிலோ கஞ்சா மாதகல் கடலில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாதகல் கடல் பகுதியில் மர்மமான முறையில் மிதந்து வந்த 116 கிலோ கிராம் கேரள கஞ்சா கடற்படையினரால் நேற்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் 23

நாட்டில் நேற்றும்

## 92 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

நாட்டில் நேற்றும் 92 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந் 23

யாழ்., கிளிநொச்சி பகுதிகளிலிருந்து

## கஞ்சா கடத்திய சிப்பாய் உள்ளிட்ட 3 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி பகுதிகளில் இருந்து நாட்டின் ஏனைய பகுதிகளிற்கு கேரள கஞ்சா கடத்திய இராணுவச் சிப்பாய் உள்ளிட்ட 23

வைரஸை ஒழிக்க முடியாது

## கொரோனாவுடன் வாழப் பழக வேண்டும்

தொற்று நோயியல் நிபுணர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவிப்பு 11 ஆம் பக்கம் பார்க்க

எதிர்வரும் 5 நாட்கள் மிகவும் அபாயகரமானவை

## நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படலாம்

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா எச்சரிக்கை



(கொழும்பு)

அடுத்து வரும் 5 நாட்கள் மிகவும் ஆபத்தான காலப்பகுதி என கொரோனா தடுப்பு செயலணியின் தலைவர் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். 23

அண்மைய நாட்களில் பரவும் கொரோனா

## ஒரு நபரிலிருந்து மற்றொருவருக்கு எளிதில் தொற்றுகின்ற அபாயம்

சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் அண்மைய நாட்களில் பரவி வரும் கொரோனா வைரஸ் ஒரு நபரிலிருந்து மற்றொருவருக்கு எளிதில் தொற்றுகின்றமை அடை 24

## வேலணையில் விபத்து இளைஞன் உயிரிழப்பு

(வேலணை)

மோட்டார் சைக்கிளும் ஹன்ரர் ரக வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இளைஞன் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் வேலணை துறையூர் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வவுனியாவில் விபத்து 5 பேர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா ஏ9 வீதி, சாந்தசோலை சந்திப்பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் இரண்டு பெண்கள் உட்பட 5 பேர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்து தொடர் பாக தெரிய வருகையில்,வவுனியா நகரப் பகுதியில் இருந்து ஏ9 வீதியூடாக சாந்த சோலை நோக்கி சென்ற மோட்டார் சைக்கிள் சாந்தசோலை சந்தியால் திரும்ப முற்பட்டபோது அதே திசையில் வேகமாக பின்னால் வந்துகொண்டிருந்த மிதிவெடி நிறுவனத்திற்கு சொந்தமான கப்ரக வாகனம் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் கப்ரக வாகனம் அருகில் இருந்து பள்ளத்திற்குள் விழுந்த நிலையில் பாரிய அசம்பாவிதங்கள் தவிர்க்கப் பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் மற்றும் கப்ரக வாகனத்தில் பயணம் செய்த நான்குபேர் உட்பட 5பேர் படு காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பாக வவுனியா போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-03.299)

# இரு ஊடகவியலாளர்கள் மீது முல்லைத்தீவில் தாக்குதல்

## மரக்கடத்தல் தொடர்பில் செய்தி சேகரிக்க சென்றபோது சம்பவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முறிப்பு பகுதியில் சட்டவிரோதமாக தேக்கு மரங்கள் அறுக்கப்பட்டு இரகசியமாக இடம்பெறும் திருட்டு தொடர்பில் உண்மைத்தன்மையினை வெளிப்படுத்தி செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்கள் இருவர் மீது சட்ட விரோத மரக்கடத்தல் கும்பல் தாக்குதலை நடத்தியுள்ளது என்று தெரிவிக்கப்படுகி ன்றது.

முறிப்பு பகுதியில் தொடர்ச்சியாக காடழிப்பு மற்றும் தேக்குமரங்கள் சட்டவிரோதமான முறையில் கடத்தப்படுவதாக மக்கள் தெரிவித்து வந்துள்ள நிலையில் சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபடும் கும்பல் ஒன்று இயங்கி வருகின்றமையினை அறிந்த முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களான ச.தவசீலன் மற்றும் க.குமணன் ஆகிய இரண்டு ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (ம-03.299)

# இந்தியா உயஸ்தானிகருடன் அமைச்சர் வாசுதேவ சந்திப்பு

(கொழும்பு)



இந்திய உயர்ஸ்தானிகருக்கும், அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று நீர்வழங்கல் அமைச்சில் இடம்பெற்றது.

இச் சந்திப்பு குறித்து கருத்து தெரிவித்த நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார,

இந்திய நாட்டில் செயற்படுத்தப்படும் சுகாதார வசதி, குடிநீர் விநியோகம் தொடர்பான அடிப்படை காரணிகளை இந்திய உயர்ஸ்தானிகர் இதன்போது தெளிவுபடுத்தினார்.

அத்துடன் 5 வருட காலத்தில் நாட்டு மக்கள் அனைவருக்கும் சுத்தமான குடிநீரை வழங்கும் செயற்திட்டம் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.

தெற்காசிய நாட்டவர்கள் ஒன்றிணைய வேண்டும் என்ற எமது கொள்கையினை இந்திய உயர்ஸ்தானிகர் வரவேற்றார். இலங்கையில் முன்னெடுக்கப்படும் வீடமைப்பு, மற்றும் இதர அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பில் பேசப்பட்டது.

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி செயற்திட்டங்களின் பலன் மக்களுக்கு முழுமையாக கிடைக்கப் பெற வேண்டும் என்றும் இதன்போது கவனத்திற் கொள்ளப் பட்டது.

தற்போது அபிவிருத்தி செயற்திட்டங்கள் துரிதமாக முன்னெடுக்கப்படுவது வரவேற்கத்தக்கது என இந்திய உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டதாக அமைச்சர் தெரிவித்தார். (ம-03)

# கந்தானைப் பகுதியில் மின்சார சபை ஊழியர்கள் 12 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

கந்தானை பகுதியில் அமைந்துள்ள லங்கா தனியார் மின்சார சபை நிறுவனத்தின் 12 ஊழியர்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

குறித்த நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர் ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை முன்னதாக கண்டறியப்பட்டது.

இவ்வாறு கொரோனா தொற்றுக்குள்ளான ஊழியரின் மகள் மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றி வந்த நிலையில் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருந்தார்.

இந் நிலையிலேயே அவரது தந்தையான லங்கா தனியார் மின்சார சபை நிறுவனத்தில் பணியாற்றிய ஊழியர் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருந்த நிலையில், அவருடன் நெருங்கிய தொடர்புகளை பேணிய 12 ஊழியர்களுக்கு பி.சி.ஆர்.சோதனைகள் முன்னெடுக்கப் பட்டது.

இதில் அவர்களுக்கு கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-03)

# ஆனந்தசங்கரி வைத்தியசாலையில்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீரசிங்கம் ஆனந்தசங்கரி வெள்ளவத்தை தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

87 வயதான அவர் திடீர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவருக்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-03)

# மரண அறிவித்தல்

பிறப்பு 09 – 09 – 1948



இறப்பு 12 – 10 – 2020

## செல்லத்துரை யோகரட்ணம்

( சண்டிலிப்பாய், சீரணி நாகபூஷணி அம்மன் கோவில் - நிர்வாக உறுப்பினர் )

சண்டிலிப்பாய், சீரணியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை யோகரட்ணம் நேற்று (12.10.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - கனகம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற தர்மலிங்கம் - புலோமிசை தம்பதிகளின் அன்பு மருமகனும் ரஞ்சினிதேவியின் அன்புக் கணவரும் றமேஸ்குமார், கிசோக்குமார், துஸ்யந்தி, றஜித்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் தாரணி, காஞ்சனா, சிறிஸ்கந்தராஜா, மகிபா ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற பாலரட்ணம், கோபாலரட்ணம் மற்றும் செல்வரட்ணம், காலஞ்சென்ற குணரட்ணம், சபாரட்ணம், செல்வராணி, செல்வதேவி, நவரட்ணம் ஆகியோரின் பாசமிகு அண்ணனும் சுசிலாதேவி, ஜெயதேவி, சிவானந்தன், யோகானந்தன், மோகானந்தன் ஆகியோரின் மைத்துனரும் லோசித், பிரித்திகா, மிதுன், அபிசா, அஸ்மிதா, அனிஸ்கா, றோசித், நித்திகா, மித்திரா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2020) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(4249)

சீரணி, சண்டிலிப்பாய். 021 225 1078 தகவல்:- யோ. ரஞ்சினிதேவி (மனைவி)


## போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்
## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் தங்குவதற்கு வசதிகளுடன் கூடிய வீடுகள் வாடகைக்குத் தேவைப்படுகின்றது. வீடு வைத்தியசாலையில் இருந்து மூன்று கிலோ மீற்றர் சுற்று வட்டாரத்திற்குள் இருக்க வேண்டும். வீடு வாடகைக்குத் தரவிரும்புபவர்கள் மேலதிக தகவல்கள் அடங்கிய படிவத்தினை அலுவலகத்தில் பெற்று பூர்த்தி செய்து, பின்வரும் முகவரிக்கு நேரடியாகவோ தபால் மூலமாகவோ மாத வாடகை உட்பட விபரங்களினை மூடிய கடித உறையில் 23.10.2020 பிற்பகல் 3.00 மணிக்கு முன்பாக அனுப்பி வைக்கவும். விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டிற்கு அமைவாக வாடகை வழங்கப்படும்.

வகை 1 :- 10 அல்லது அதற்கு மேற்பட்ட அறைகள் கொண்ட வீடு
(யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து 3 Km இற்கு உட்பட்டது.)

வகை 2 :- 5 அல்லது அதற்கு மேற்பட்ட அறைகள் கொண்ட வீடு
(யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து 3 Km இற்கு உட்பட்டது.)

வகை 3 :- 5 அல்லது அதற்கு மேற்பட்ட அறைகள் கொண்ட வீடு
(தெல்லிப்பளை வைத்தியசாலையிலிருந்து 3 Km இற்கு உட்பட்டது.)

(C-515)

பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

# இந்தியாவிலிருந்து வந்தவர்கள் தனிமைப்படுத்தல் நடைமுறையை முறையாக பூர்த்தி செய்துள்ளனர்

## பிராண்டிக்ஸ் நிறுவனம் மீண்டும் அறிக்கை

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து வந்த அனைத்து ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்ப அங்கத்தவர்கள் 341 பேரும் தனிமைப்படுத்தல் நடைமுறைகளை முறையாக பூர்த்தி செய்துள்ளனர் என்று சுகாதார அதிகாரிகள் வழங்கிய உறுதிப்பத்திரத்தை முன்வைப்பதற்கு தயாராகவுள்ளதாக மினுவாங்கொடை ஆடை தொழிற்சாலை தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அறிக்கையொன்றினை வெளியிட்டு இதனை தெரிவித்திருக்கும் ஆடை தொழிற்சாலை நிர்வாகம் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது ,

341 ஊழியர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் கடந்த ஜூன் 25, ஓகஸ்ட் 8 மற்றும் செப்டெம்பர் 22 ஆகிய திகதிகளில் மூன்று தனித்தனி விமானங்களில் (chartered flights) இந்தியா - விசாகப்பட்டினத்திலுள்ள எமது கிளையிலிருந்து நாட்டை வந்தடைந்தனர். இவ்வாறு வந்த அனைவரும் தனிமைப்படுத்தலை முறையாக பூரணப்படுத்தினார்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றோம்.

அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படுகின்ற தனிமைப்படுத்தல் நிலையங்களில் 14 நாட்கள் தனிமைப்படுத்தலை நிறைவு செய்ததன் பின்னர் அதனை உறுதிப்படுத்தும் வகையில் கொவிட்-19 வைரஸ் பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் என்போர் கையெழுத்திட்ட சான்றிதழ் ஒவ்வொரு நபருக்கும் வழங்கப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து முதல் இரண்டு விமானங்களில் வந்தவர்கள் தத்தமது பிரதேச பொது சுகாதார ஆய்வாளர்களின் மேற்பார்வையின் கீழ் 14 நாட்கள் சுய தனிமைப்படுத்தலையும் முன்னெடுத்துள்ளனர்.

இதற்கான சான்றிதழும் வழங்கப்பட்டுள்ளது. செப்டெம்பர் 22 ஆம் திகதி வந்தவர்கள் தற்போது சுய தனிமைப்படுத்தலில் உள்ளனர். அவர்களின் சுய தனிமைப்படுத்தல் நிறைவடைந்தவுடன் அதற்கான சான்றிதழும் வழங்கப்படும்.

எனவே இவ்விடயம் தொடர்பில் விசாரிக்கும் எந்தவொரு அரசாங்க அதிகாரியின் சோதனைக்கும் அவற்றை பெற்றுக்கொள்ள முடியும். மேலும் கடந்த இரு மாதங்களில் இந்தியாவிலிருந்து பயணிகள் எவரும் மினுவாங்கொடை தொழிற்சாலைக்குள் வரவில்லை. அத்துடன் தொற்றுக்குள்ளான ஊழியர்களும் அவர்களது குடும்பத்தினரும் குணமடைவதற்கு தேவையான உதவிகளை வழங்கத் தயாராகவுள்ளோம்.

அதற்கமைய ரம்புக்கனையிலுள்ள பிராண்டிக்ஸ் தொழிற்சாலையொன்று 300 படுக்கைகளைக் கொண்ட தனிமைப்படுத்தல் நிலையமாக மாற்றப்பட்டுள்ளது. (ஜ)

# மக்கள் அரசாங்கத்தின் செயற்பாட்டுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்

## இராணுவத்தளபதி மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் அரசாங்கத்தின் செயற்பாட்டுக்கு பொது மக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என இராணுவத்தளபதி சவேந்திர சில்வா மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றின் நிலைமைகள் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே சவேந்திர சில்வா இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது, "மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையுடன் தொடர்புடைய பலர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.


இவர்கள் ஊடாக, இரண்டாவது நபர்கள் சிலருக்கும் கொரோனாத் தொற்று பரவியுள் ளமை தற்போது கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறு அடையாளப்படுத்தப்பட்ட அனைவரும் தற்போது சிகிச்சைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.

அத்தோடு, பி.சி.ஆர். பரிசோதனைகளை தொடர்ந்தும் மேற்கொள்ளுமாறும் மக்கள் கோரி வருகிறார்கள்.



ஆனால், முதல் கொரோனாத் தொற்றாளர் ஒருவருடன் தொடர்பு கொண்டு 6 நாட்களுக்குப் பின்னரே இரண்டாவது தொற்றாளருக்கு பி.சி. ஆர். ஊடாக தொற்றை உறுதிப்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

# பொருளாதாரத்துக்கான நோபல் இரு அமெரிக்கர்களுக்கு




(ஸ்டோக்ஹோம்)

அமெரிக்க பொருளாதார வல்லுநர்களான போல் மில்கிரோம் மற்றும் ரோபர்ட் வில்சன் ஆகியோருக்கு 2020 ஆம் ஆண்டுக்கான பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் இருவருக்குமான பரிசுத்தொகையாக 10 மில்லியன் ஸ்வீடிஸ் குரோனரும் (1.14 மில்லியன் அமெரிக்க டொலர்) வழங்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# அகில இலங்கை சுகாதார ஊழியர் சங்கம் சுகாதார அமைச்சருக்கு கடிதம்

(கொழும்பு)

சுகாதார ஊழியர்கள் முகம் கொடுத்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு நேரம் ஒதுக்கித்தருமாறு கோரி அகில இலங்கை சுகாதார ஊழியர் சங்கம் சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சிக்கு நேற்றுத் திங்கட்கிழமை கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.


கொவிட்-19 வைரஸ் நிலைமைக்கு முகம்கொடுப்பதற்கு தேவையான சுகாதார பாதுகாப்பு உபகரணங்கள் பற்றாக்குறை மற்றும் திட்டமிடப்படாத வேலைத்திட்டங்கள், 180 நாட்களை பூரணப்படுத்திய ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாமை, ஊழியர்கள் பற்றாக்குறை, நோயாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் வழங்கப்பட்ட உணவை திடீரென நிறுத்தியமை மற்றும் மேலதிக வேலை நேரத்துக்கான கொடுப்பனவு உள்ளிட்ட விடயங்கள் குறித்து கலந்துரையாடுவதற்கு சுகாதார அமைச்சருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வை வழங்க முன்வருமாறும் அவை தொடர்பில் கலந்துரையாடுவதற்கு



துரிதமாக நேரத்தை ஒதுக்கித் தருமாறும் கோருவதாக அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# அதிரடியாக குறைக்கப்படும் ரணில்-மைத்திரியின் பாதுகாப்பு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க ஆகியோரின் பாதுகாப்பு படையினரின் எண்ணிக்கையை புதிய சுற்றறிக்கையின் பிரகாரம் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட விசேட அதிரடிப்படையினர் 100 பேரில் 94 பேர் மீளப்பெறப்படவுள்ளதுடன், பொலிஸார் 100 பேரில் 54 பேர் மட்டுமே தொடர்ந்தும் சேவையாற்ற முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட பொலிஸார் 200 பேரில் 60 பேர் மட்டுமே தொடர்ந்தும் சேவையாற்ற முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட விசேட அதிரடிப்படையினர் தங்கியிருந்த வீட்டை திரும்ப ஒப்படைக்கும்படியும் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# புதிய பொது நம்பிக்கை பொறுப்பாளராக சட்டத்தரணி கணேஷ் ஆர்.தர்மவர்தன

(கொழும்பு)

**இலங்கையின் புதிய பொது நம்பிக்கை பொறுப்பாளராக சட்டத்தரணி கணேஷ் ஆர்.தர்மவர்தன நியமிக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் சட்டத்தரணி மொஹமட் அலி சப்ரி தெரிவித்துள்ளார். (ஐ-4)**



# வர்த்தகர்கள் அரிசியைப் பதுக்கினால் அரசாங்கம் மாற்று நடவடிக்கை



(கொழும்பு)

வர்த்தகர்கள் அரிசியைப் பதுக்கி, அரிசிக்கான செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தவும், விலை அதிகரிப்பை மேற்கொள்ளவும் நடவடிக்கைகளை மேற்கொள்வார்களானால் வெளிநாடுகளிலிருந்து அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரிசியை இறக்குமதி செய்வதற்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ள நிலையில், அதற்கென அரசு 2 பில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதில்லை என்ற கொள்கையை அரசாங்கம் கொண்டுள்ள நிலையில், அதனை மீறி செயற்படுவோருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

# அமெரிக்காவை அச்சுறுத்தும் கொரோனா 80 இலட்சத்தை நெருங்கும் பாதிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் கொரோனாத் தொற்று உறுதியானோர் எண்ணிக்கை 80 இலட்சத்தை நெருங்கியுள்ளது. சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது உலகம் முழுவதும் பரவி வருகிறது. உலகில் 210 நாடுகளுக்கு மேல் பரவியுள்ள இந்த வைரஸ் பெரும் உயிரிழப்புகளை ஏற்படுத்தி வருகிறது. கொரோனா வைரஸின் தாக்கம் அமெரிக்காவில் தீவிரமடைந்து வருகிறது. (ஐ-4)



## ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் வசிப்போருக்கான அறிவிப்பு

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ள மருந்தகங்கள் மற்றும் அத்தியாவசிய தேவை பொருட்கள் விநியோகிக்கும் மத்திய நிலையங்களை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இன்று முதல் நாளை மறுதினம் வியாழக்கிழமை வரை குறித்த மத்திய நிலையங்களை மூடுவதற்கு தீர்மானித்துள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

குறித்த பகுதிகளில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள போதிலும் மருந்தகங்கள் மற்றும் அத்தியாவசிய தேவை பொருட்கள் விநியோகிக்கும் மத்திய நிலையங்கள் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

## தனியார் வைத்தியசாலை மூடல்

(கொழும்பு)

மொரட்டுவையில் உள்ள மெடிஹெல்ப் தனியார் வைத்தியசாலையின் கிளை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் 5 ஆம் திகதி ஒரு கொரோனாத் தொற்று நோயாளி குறித்த வைத்தியசாலைக்கு செல்லப்பட்டதாக கூறப்பட்டதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த நோயாளி இரத்த பரிசோதனைக்காக வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார். அவரது சோதனை முடிவுகளில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை தெரியவந்துள்ளது. இந்நிலையில் வைத்தியசாலையின் அனைத்து ஊழியர்களுக்கும் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கொரோனா குறித்து போலி செய்திகள் வேண்டாம்

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டிருக்கும் ஆடைத் தொழிற்சாலையின் கொத்தணி தொற்றின் அசாதாரண சூழ்நிலை காரணமாக மக்களின் மனதில் பல கேள்விகள் எழுந்துள்ளன.

அரசாங்கம் கொரோனாவை கட்டுப்படுத்துவதையும் தொற்றுக்குள்ளானவர்களை கண்டு பிடிப்பதன் வேகம் மிகவும் குறைவாக உள்ளதாக சமூக வலைத்தளங்களிலும் போலிச் செய்திகள் பரவி வருவதாக புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் உப தலைவர் சமன் குமார் தெரிவித்தார்.

மக்களை அநாவசியமாக குழப்பும் வகையில் போலி செய்திகளை பரப்பக்கூடாது. அவ்வாறு செயற்படுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

வைரஸ் தொற்று குறித்து அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்க அனைவரும் முன்வர வேண்டும். இது அரசியல் இலா பம் தேடும் நேரமல்ல.

எதிர்க்கட்சி என்றாலும் ஆளும் கட்சி என்றாலும் அனை வரும் ஒன்றிணைந்து மக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-4)



அதிமேதகு ஜனாதிபதியினதும்
கௌரவ பிரதமரினதும்
சிந்தனையின் செயல் வடிவம்


வடக்கின் விவசாயப் புரட்சி

North Lanka IIT City Campus
Faculty of Agriculture
Agriculture Research உடன் இணைந்த பயிற்சி
கல்லூரியுடன் கூடிய Modern Research Farm
Kariyalai Nakapaduvaan, Poonakary.

(C-511)

Proposed by - S.A.Balasubramaniyam Reading PhD
Rector - North Lanka IIT
City Campus
Faculty of Agriculture

Proposed Presented - Divisional Secretary
Divisional Secretariat
Poonakary
Kilinochchi.

Location -
Kariyalai Nakapaduvaan
Poonakary Divisional


NORTH LANKA RESEARCH FOUNDATION

B.Sc விவசாய விஞ்ஞான பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

முதலாவது பிரிவில்
30 மாணவர்கள் மட்டுமே
அனுமதிக்கப்படுவர்.
UGC அங்கீகாரம் உடைய
பல்கலைக்கழகம்
கற்கைநெறி ஆரம்பம்
23.10.2020

தகமை - NVQ Level 04 / O/L / A/L
Duration: 03 Years முழுநேரப் -பயிற்சி
விண்ணப்ப முடிவுத் திகதி: 20.10.2020
தொடர்புகளுக்கு:- 076 7504535, 077 8849677, 077 8657957



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர். செல்லத்துரை நடேசபிள்ளை

(இனிச்ச புளியடி முருகன் தேவஸ்தான தர்மகர்த்தா)

மலர்வு
21 - 03 - 1936

உதிர்வு
26 - 09 - 2019




எம் குலம் காக்க வந்த தெய்வமே
அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும்
பல அறிவுரைகள் கூறி எமை
அரவணைத்து வளர்த்த அப்பாவே திடீரென
நீங்கள் முருகனடி சேர்ந்தது எங்கள்
இரத்தத்தையே உறைய செய்து விட்டதப்பா
இவ்வுலகிலும் முருகன் உங்களை வேண்டும் என்கிறான்
அவ்வுலகிலும் உங்களை தனக்கு வேண்டும் என்கிறான்
எங்களை பரிதவிக்க விட்டு அப்பா உங்கள்
பேரப்பிள்ளைகள் தாத்தா எங்கே எங்கே
வரமாட்டாரா என்று கேட்டபடி உள்ளனர்
பதில் சொல்ல முடியாமல் தவிக்கிறோம்
அப்பா என்ற சொல் எங்கள் நெஞ்சங்களையே
வெடிக்க வைக்கும் போல் உள்ளதப்பா
முருகா முருகா என்று வாய் ஓயாமல்
சொல்லும் உங்களை முருகன் தனது
பாதார விந்தத்தில் வைத்திருப்பான் என்பது உண்மை
முருகன் பாதத்தில் உங்கள் ஆத்மா
சாந்தி அடைய முருகனை
வேண்டி நிற்கும் குடும்பத்தினர்.

(4216)

2ம் வட்டாரம் அல்லைப்பிட்டி.

தகவல்: திருமதி நடேசபிள்ளை குடும்பத்தினர்.

# வடக்கு சுகாதார திணைக்கள சாரதிகள் கவனயீர்ப்புப் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சுகாதார திணைக்களத்தைச் சேர்ந்த சாரதிகள், கவனயீர்ப்பு போராட்டமொன்றை நேற்று யாழில் முன்னெடுத்துள்ளனர்.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக இக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.


சாரதிகள் விடயத்தில் அரசியல் தலையீடுகள் புகுத்தப்படுவதாக குற்றஞ்சாட்டியுள்ள அவர்கள், தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக நேற்று சுகயீன விடுமுறை போராட்டத்தை முன்னெடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

இதன்போது ஆளுநரின் செயலாளரிடம் மகஜர் ஒன்றையும் கவனயீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்த சாரதிகள் கையளித்தனர்.

இடமாற்றம் வழங்கப்பட்ட 35 சுகாதாரத் திணைக்கள சாரதிகளில், 25 சாரதிகள் குறித்த இடமாற்றக் கட்டளையைப் பின்பற்றாமல் உள்ளதோடு, தங்களை வேறு திணைக்களங்களுக்கு இடமாற்றம் செய்வதனை நிறுத்துமாறும், தங்களது இணைந்த ச்ாரதி சேவையை மூடிய சுகாதார சேவையாக்குமாறும் கோரிக்கை முன்வைத்து சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சுகாதார சேவைகள் சாரதிகளின் நீதியற்றதும், குறுகிய மனப்பான்மை கொண்டதுமான இணைந்த சேவையிலுள்ள சுகாதார திணைக்கள சாரதி சேவையை மூடிய சேவையாக்கும் கோரிக்கையடங்கிய அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக நம்பத்தகுந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே, இவ்வாறான அமைச்சரவைப் பத்திரத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக இந்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தின் நிறைவில், வடமாகாண ஆளுநர் மற்றும் சுகாதர அமைச்சுக்கும், உள்ளூராட்சி அமைச்சுக்கும் மகஜர் கையளித்தனர். (5-7-101)

# வடமராட்சியில் இரண்டு தனியார் கல்வி நிலையங்கள் சீல் வைப்பு



(கரணவாய்)

வடமராட்சி பகுதியில் கரணவாய் மற்றும் வதிரி பகுதிகளில் இயங்கிய இரு தனியார் கல்வி நிறுவனங்கள் சுகாதார பரிசோதகர் களால் நேற்று சீல் வைக்கப் பட்டுள்ளன.

தற்போது கொவிட்- 19 அதிகரித்தலையடுத்து தனியார் கல்வி நிலையங்களை மீள் அறிவித்தல் வரை மூடுமாறு அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவித்தலைக் கருத்தில் கொள்ளாது தொடர்ந்தும் தமது கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்தமை தொடர் பிலேயே இக்கல்வி நிலையங்களுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி பிரதேச வைத்திய அதிகாரியின் அறிவுறுத்தலுக்கு அமைய நெல்லியடி சுகாதார பரிசோதகர்களால் இத் தனியார் கல்வி நிறுவனங்கள் இரண்டிற்கும் சீல் வைக்கப்பட்டுள்ளது. (5-7-60)

# பாலங்கள் அமைப்பதால் பயிரழிவைத் தடுக்க முடியும்

## நகரசபை உறுப்பினர்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கிழக்கு பகுதியில் உள்ள வயல் நிலங்களில் விளையும் நெற்பயிர்களின் அழிவைத் தடுக்கும் முகமாக பாலங்கள் சீரமைக்கப்பட வேண்டிய தேவைப்பாடு நிலவுவதாக சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.வேலாயுதபிள்ளை கோரிக்கை விடுத்துள்ளார். யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதனிடம் இக்கோரிக்கையை விடுத்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தென்மராட்சி கச்சாய் மற்றும் அல்லாரைப் பகுதிகளில் உள்ள பாலங்கள் உரிய வகையில் சீரமைக்கப்படாமையால் கச்சாய் குள வயல்வெளி, ஒவாளிக்குள வயல்வெளி, வண்ணாங்குள வயல்வெளி, அடம்பிக்குள வயல் வெளி மற்றும் செட்டிக்குள வயல் வெளிகளில் மாரி காலத்தில் வெள்ளம் தேங்குவதால் நெற்பயிர்கள் அழிவடைகின்றன.

எனவே மாரி காலங்களில் நெற்பயிர் அழிவைத் தடுக்கும் முகமாக அல்லாரை அறுகம்புல் வெளியில் அடம்பிக்குளத்திற்கு மேற்குப்பக்கமாக உள்ள வாய்க்காலுக்கு பாலம் அமைக்க வேண்டும்.

அத்துடன் அடம்பிக்குளம்-செட்டிக்குளம் ஆகியவற்றுக்கு இடையில் சாவகச்சேரி கச்சாய் வீதியில் பாலம் அமைக்க வேண்டும்.

அதனை விட அல்லாரை-வெள்ளாம்போக்கட்டி ஊரெல்லையில் வண்ணாங்குளத்திற்கும் -அடம்பிக் குளத்திற்கும் இடையே சேதமடைந்திருக்கும் மதகினை புனரமைக்க வேண்டும். குறித்த பாலங்களை சீர் செய்வதன் மூலம் நெற்பயிர் அழிவதைத் தடுக்க முடியும்.

பாலங்கள் சீரின்மையால் மழைநீர் வழிந்தோட முடியாமல் வயல் நிலங்களில் அளவுக்கதிகமான நீர் தேங்கி நெற்பயிர்கள் அழிவடைந்து விடுகின்றன என மேலும் அவர் மேலும் தெரிவித்தார். (5-7-30)

# குப்பைகள் கொட்டுவதை நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை



(குருநகர்)

குருநகர் ஜே/69 றெக்கள மேசன் மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கருவாடு பதனிடும் இடத்திற்கு அருகில் அமைந்துள்ள கடல்பரப்பை நிரவும் நோக்குடன் மாநகரசபையினால் குப்பைகள் கொட்டப்பட்டுக்கொண்டே இருக்கின்றது.

குப்பை மேடாக காட்சியளிக்கும் இவ்விடம் தொற்று நோயினைப் பரப்பும் இடமாகவும் அமைந்துள்ளது.

அத்துடன் துர்நாற்றமும் வீசுகின்றது. தற்போது மழை காலம் என்பதால் நுளம்பு பெருகுவதற்கு ஏற்ற சூழலாகவும் காணப்படுகின்றது.

எனவே அவ்விடத்தில் குப்பை கொட்டுவதை நிறுத்துமாறு அமைப்புக்கள் ஊடாக பலதடவை கோரிக்கை விடுத்த போதும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.(5-7-106)

# விடுதியில் தங்கியிருந்த ஆசிரிய மாணவர்கள் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்று வந்த 375 ஆசிரிய மாணவர்கள் அவர்களது வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய் தேசியக் கல்வியியற் கல்லூரி மாணவர் விடுதி தனிமைப்படுத்தல் முகாமாக மாற்றப்பட உள்ளதன் காரணமாக மாணவர்களை அவர்களது வீடுகளுக்கு அனுப்பும் நடவடிக்கையினை நேற்று நிர்வாகம் மேற்கொண்டது. அதனடிப்படையில் அந்தந்த மாவட்டங்களுக்கு உரியவர்கள் தனித்தனியான பேருந்தில் அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கையினை கல்லூரி நிர்வாகம் இராணுவத்துடன் இணைந்து முன்னெடுத்தது. நேற்றுத் திங்கட்கிழமை காலையில் எட்டு பேருந்துகளில் 71 ஆண் ஆசிரிய மாணவர் களும் 304 பெண் ஆசிரிய மாணவர்களும் அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அத்தோடு கல்லூரியானது தனிமைப்படுத் தல் முகாமாக மாற்றுவதற்கு இராணுவத்தினரால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. (5-7-104)

# தடை உத்தரவை மீறி இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்கள்

(குருமன்காடு)

கொவிட்-19 தாக்கம் மீண்டும் அதிகரித்து வரும் நிலையில் தனியார் கல்வி நிலையங்களையும் மூடுமாறு அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஆயினும் இவ் அறிவித்தலை மீறி வவுனியாவில் பரவலாக தனியார் கல்வி நிலையங்கள் இயங்குவதாக பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

கொவிட் - 19 தாக்கத்தையடுத்து பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளதுடன், பல்கலைக்கழகங்கள், தேசிய கல்வியியற் கல்லூரிகள் என்பனவும் மூடப்பட்டு வருகின்றன. அரசின் முக்கிய திணைக்களங்களின் செயற்பாடுகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் பல மாகாணங்களில் தனியார் கல்வி நிலையங்களையும் தற்காலிகமாக மூடுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. அந்தவகையில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் உள்ளூராட்சி திணைக்களம் ஊடாக தனியார் கல்வி நிலையங்களை மூடுமாறு தெரிவித்திருந்தார். ஆனாலும், வவுனியாவின் சில தனியார் கல்வி நிலையங்கள் இயங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. (5-7-250)

# சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## கேள்வி அறிவித்தல்

தலைவர்,பெறுகைக் குழு, சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் பின்வரும் சேவைகளுக் கான 01.01.2021 தொடக்கம் 31.12.2021வரையான காலப்பகுதிக்கு முத்திரை யிடப்பட்ட கூறுவிலைகள் பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றது.

பெறுகையின் பெயர், இல:-

1. பொன்விழா மண்டப நிகழ்வுகளிற்கு உணவுவழங்குநரை தெரிவு செய்தல் **NP/14/41(3)/Town Hall/Food Supply/2021**
2. பொன்விழா மண்டப நிகழ்வுகளிற்கு இரண்டு கதலி வாழைக்குலைகளை மரத்துடன் கொண்டுவந்து கட்டுவதற்கான வழங்குநரை தெரிவு செய்தல் **NP/14/41(3)/Town Hall/Banana/2021**

பெறுகைஇல. **(01)NP/14/41(3)/Town Hall/Food Supply/2021**

பொன்விழா மண்டப நிகழ்வுகளிற்கு உணவு வழங்குநரை தெரிவு செய்தல்.

நிபந்தனைகள் :-

1. உணவு வழங்குநர் வியாபாரப் பதிவுசெய்திருப்பதுடன் வியாபார உரிமம் பெற்றிருத்தல் வேண்டும்.அத்துடன் சமையல் செய்து வழங்கும் பகுதியானது நகராட்சிமன்ற எல் லைக்குள் காணப்படல் வேண்டும்.
2. தாங்கள் உணவு தயாரிக்கும் மற்றும் களஞ்சியப்படுத்தும் இடத்தினை எமது பொதுச் சுகாதார பரிசோதகர் அல்லது எம்மால் அனுமதியளிக்கப்படுகின்ற உத்தியோகத்தர் பார்வையிடுவதற்குஅனுமதியளிக்கவேண்டும்.
3. சமையல் செய்யும் பகுதிமற்றும் சமையல் மேற்கொள்பவர்கள் சுத்தமாக இருப்பதுடன் சமையல் மேற்கொள்பவர்கள் மருத்துவச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
4. தங்களால் வழங்கப்படும் உணவு வகைகள் அனைத்தும் நகராட்சிமன்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்.
5. தங்களால் தயாரிக்கப்ப்டும் உணவு வகைகள் தொடர்ச்சியாக எப்போதும் சுவைமிக்கதாகவும் தரமுள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.
6. எங்கள் பணிப்பிற்கிணங்க எந்த உணவு வகைகளும் வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
7. உரியநேரத்திற்கு உணவு வகைகள் யாவும் தயாரித்து வழங்குதல் வேண்டும்.
8. தொழிற்றகைமை மற்றும் அனுபவச்சான்றிதழ்கள் இணைக்கப்படல் வேண்டும்.
9. தங்களிற்கு எமது மன்றத்தினால் வழங்கப்படும் உணவுக்கான கொடுப்பனவுத் தொகை யிலிருந்து 12.5% தரகுப் பணமாக எம்மால் அறவிடப்படும்.
10. தாங்கள் பொன்விழா மண்டப நிகழ்வு ஏற்பாட்டாளர்களுடன் நிகழ்விற்கு உணவு வழங் குதல் தொடர்பாக நகராட்சி மன்றத்தினூடாக மட்டுமே தொடர்புகளை மேற்கொள்வதுடன் எம்மால் குறிப்பிடப்படும் உணவு வகைகள் மற்றும் அளவுகள் மட்டுமே விநியோகம் செய்தல் வேண்டும்.

பெறுகைஇல: **(02)NP/14/41(3)/Town Hall/Banana/2021** பொன்விழா மண்டப நிகழ்வுகளிற்கு இரண்டு கதலி வாழைக்குலைகளை மரத்துடன் கொண்டுவந்து கட்டுவதற்கான வழங்குநரை தெரிவுசெய்தல்

நிபந்தனைகள் :-

1. எங்கள் பணிப்பிற்கிணங்க எந்த தினத்திலும் சேவை வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
2. உரிய நிகழ்வன்று அதிகாலை 06:00 மணிக்கு முன்னதாக அல்லது குறிப்பிடப்படும் நேரத்தில் மரத்துடன் கூடிய இரண்டு கதலி வாழைக்குலைகட்டப்படுதல் வேண்டும்.
3. வாழைக்குலைகள் 25Kg– 30Kg எடைகொண்டதாகவும் பழமாகவும் இருத்தல் வேண்டும்.
4. தங்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுத் தொகையிலிருந்து12.5%தரகுப் பணமாக எம்மால் அறவிடப்படும்.

குறிப்பு :-

1. சாவகச்சேரி நகராட்சிமன்றத்தினால் வழங்கப்படும் கேள்விப் பத்திரங்களை மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. கூறுவிலைப் பத்திரங்களை 13.10.2020 ஆம் திகதி மு.ப 09:30 இலிருந்து 02.11.2020திகதி பி.ப 02:30 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணம் ரூ1,000.00 இனைச் செலுத்தி அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நகராட்சி மன்றத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.
3. கூறுவிலைகள் 03.11.2020 மு.ப 10.30 மணிக்குமுன்னர் கிடைக்கக் கூடியதாக "தவிசாளர், நகராட்சிமன்றம், சாவகச்சேரி" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம்.அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கூறுவிலைப் பெட்டியில் இடப்படுதல் வேண்டும்.
4. கூறுவிலை உள்ளடங்கிய கடிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில் பெறுகை இல எழுதப்படல் வேண்டும்.
5. கூறுவிலைகள்03.11.2020 ஆம் திகதி மு.ப11.00 மணிக்குத் திறக்கப்படும். அத்தருணம் வழங்குநரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
6. தெரிவு செய்யப்படும் வழங்குநர்கள் சபையுடன் உடன் படிக்கை ஒன்றை மேற் கொள்ளவேண்டும்.
7. கேள்வி தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை நகராட்சி மன்றபெறுகைக் குழுவுக்கே உரியது.
8. மேலதிக விபரங்களுக்குநேரடியாகவோஅல்லது தொ.பே.இலக்கம் 021-2270963 மூலமோ தொடர்புகொள்ளவும்.

**திருமதி.சிவமங்கை இராமநாதன்,**
**தவிசாளர்,**
**நகராட்சிமன்றம்,**
**சாவகச்சேரி.**
**13.10.2020**

(சி-513)


# மணிவிழா வாழ்த்துக்கள்



**திருமதி லிங்கேஸ்வரி ரகுநாதன்**
SLTS - 1
B.A(Hons),Dip.in.Education
13.10.2020 அன்று மணிவிழா காணும் எமது ஆசிரியை அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்

**சேவை விபரம்**
மு/ பாண்டியன் குளம் ம.வி-20.01.1989 – 14.11 1992
மு/ அம்பலவன் பொக்கணை ம.வி-15.11.1992 – 31.12.1993
மு/ முள்ளிவாய்க்கால் மேற்கு க.உ.வி-01.01.1994 – 04.01.1995
மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி-05.01.1995 – 31.12.1999
வலயக்கல்வி அலுவலகம் முல்லைத்தீவு-01.01.2000 – 01.01.2008
வவு/ மதீனா வித்தியாலயம் –02.01.2008 – 20.04.2012
யா/ மல்லாகம் ம.வி– 21.04.2012 – 21.04.2013
மு/ அம்பலவன் பொக்கணை ம.வி 22.04.2013 – 31.08.2014
மு/ வேணாவில் சிறி முருகானந்த வித்தி 01.09.2014 – 01.01.2017
மு/ புதுக்குடியிருப்பு றோ.க.வி 02.01.2017 – 12.10.2020

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
மு/ புதுக்குடியிருப்பு
றோ.க.வித்தியாலயம்.
புதுக்குடியிருப்பு.

# கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ALTO கார்
விற்பனைக்கு உண்டு. (4239)

**தொடர்புகளுக்கு: 075 054 4020**

# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>கி.பா: 0 செவ் 9 இல் உயரம்: 6'<br>தகைமை/தொழில்: **B.Sc IT Software Engineering, Software Engineer (private)**<br>எதிர்பார்ப்பு: தகுந்த உத்தியோகமுள்ள பெண்<br>தொ.இ: **B/11299** | பிறப்பு: 1970 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 35 செவ் 2 இல் உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: பட்டதாரி. ஆரச முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு: படித்த பொருத்தமான மணமகன்<br>தொ.இ: **G/912** |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>கி.பா: 25 3/4 சூரி.செவ் 12 இல் உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச உத்தியோகமுள்ள பெண்<br>தொ.இ: **B/10051** | பிறப்பு: 1974 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: அச்சுவினி சூரி, செவ் 12 இல் உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: தனியார், அரச உத்தியோகத்தர் மணமகள் விவாகரத்தானவர் விவாகரத்தும் ஏற்கப்படும்<br>தொ.இ: **G/913** |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 2<br>கி.பா: 39 சூரி,செவ் 4 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண் மணமகன் விவாகரத்தானவர் பிள்ளைகளற்ற விவாகரத்து கணவனை இழந்தவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: **B/10620** | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 4<br>கி.பா: 79 1/4 செவ் 8 இல் உயரம்: 5'<br>தகைமை/தொழில்: வெளிவாரிப்பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார், சுய தொழில்<br>தொ.இ: **G/926** |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>கி.பா: 11 1/2 செவ் 4 இல் உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. சொந்த வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/9975 | பிறப்பு: 1973 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: பரணி 4<br>கி.பா: செவ் 3 இல் உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: **Diploma Teacher**<br>எதிர்பார்ப்பு: மணமகள் விவாகரத்தானவர் விவாகரத்தும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/936 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**

# கை கழுவ கால் கடுக்க நிற்கிறோம்





(நெளுக்குளம்)

வவுனியா பிரதேச செயலகத்திற்குள் செல்வதற்கு முன் கை கழுவுவதற்காக பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.


இதனால் பல்வேறு தாமதங்கள் ஏற்படுகிறது. எனவே பிரதேச செயலகத்தில் கைகழுவும் வசதிகள் அமைத்துத்தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து சேவை பெற்றுக்கொள்ள சென்ற பொது மக்கள் தெரிவிக்கும் போது, வவுனியா பிரதேச செயலகத்திற்கு நேற்று தமது சேவைகளை பெற்றுக்கொள்ள சென்ற போது பிரதான வாசலில் வைக்கப்பட்டுள்ள ஒரே ஒரு கைகழுவும் பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளதாகவும் பல்வேறு இடங்களிலிருந்து வரும் மக்கள் பல அசௌகரியங்களுக்கு உட்பட்டு வருவதாகவும் தெரிவித்தனர். (5-299)



சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு வவுனியா பிரதம தபாலகத்தில் குருதித்தானம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் மஞ்சுளா ஜெயசுந்தர தலைமையில் இடம் பெற்றது.

# மூடப்பட்டது கடவுச்சீட்டு அலுவலகம்



(நெளுக்குளம்)

வவுனியாவில்அமைந்துள்ள பிராந்திய குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் மூடப்பட்டுள்ளது.

நாட்டில் கொவிட்-19 வைரஸ் தாக்கம் பரவலடைவதை அடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக கடந்தவாரம் 6 ஆம் திகதியிலிருந்து கடவுச்சீட்டு அலுவலகத்தில் கடவுச்சீட்டு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

நாட்டில் சுமுகமான சூழ்நில்ல உருவாகிய பின்னரே அலுவலகத்தின் சேவைகள் வழமைக்கு திரும்பும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (5-7-299)

# உத்தரவாத விலையில் உழுந்தினை கொள்வனவு செய்ய நாம் தயார்

## கமநல அபிவிருத்தி ஆணையாளர்

(நெளுக்குளம்)

உழுந்திற்கான விலை குறைவடைந்தால் கமநல அபிவிருத்தித் திணைக்களம் அதனை உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்யும் என்று வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் இ.விஜயகுமார் தெரிவித்துள்ளார். .

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் அதிகளவான உழுந்து உற்பத்தியில் ஈடுபடுவது வவுனியா மாவட்டமே. தற்போது ஒரு கிலோ உழுந்தின் விலை 800 ரூபாய்க்கு மேல் காணப்படுகிறது நாம் அறிந்ததே. எனினும் அறுவடையின் போதும் உத்தரவாத விலையேனும் விவசாயிகளிற்கு கிடைப்பதில்லை. கடந்த காலத்தில் ஆகக்கூடுதலாக ஒரு கிலோ 140 ரூபாவிற்கே விற்க முடிந்தது.

இம்முறை2020/2021பெரும் போகத்தின் போது அரசின் உத்தரவாத விலையான கிலோ ஒன்றிற்கு **220/=** ரூபாயினை விட குறையுமாயின் வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களம் அதனை உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்யும். எனவே பயமின்றி இம்முறை உழுந்து உற்பத்தியினை மேற்கொள்ளுங்கள்.

கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையிடம் இருந்து உழுந்து செய்கைக்கான காப்புறுதியை செய்து கொள்ள முடியும்.

இது தொடர்பான தகவல்களுக்கு உதவி பணிப்பாளர்-கதிர்காமநாதனின்- 077 977 9038 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்துவதன் மூலம் அறிந்துகொள்ள முடியும்.

ஒரு ஏக்கருக்கு **50,000/=** வரையான காப்புறுதி தொகைக்காக **2,250/=** ரூபாயைக் கட்டணத் தொகையாகச் செலுத்திக் கட்டாயமாகப் பயிர் காப்புறுதியினை மேற்கொள்ளுங்கள்.

விதை உழுந்தினை வவுனியா மாவட்ட விவசாய திணைக்களத்தின் விதைகள் மற்றும் நடுகை பொருட்கள் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவித்தார். (5-299)




மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தினர் நேற்று உயர்தர பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு ஒரு தொகுதி கிருமி தொற்று நீக்கி மற்றும் முகக்கவசங்களை மன்னார் மாவட்ட பதில் அரசாங்க அதிபரிடம் கையளித்தனர்.



இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார் கிளையினால் நேற்று ஒரு தொகுதி தனிநபர் பாதுகாப்பு அங்கிகள் மற்றும் உபகரணங்கள் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டன.

# சரணாலயப் பகுதியை துப்புரவு செய்த நால்வர் பொலிஸாரால் கைது

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் குடியிருப்பாளர்கள் சிலர் வெலிஓயா கிராமத்தில் மட்டுப்படுத்தப்பட்ட பறவைகள் சரணாலயத்தின் ஒரு பகுதியில் நெற் செய்கை மேற்கொள்வதற்காக துப்புரவுப்பணிகளை மேற்கொண்டதாக கூறி நான்கு விவசாயிகளை நேற்று முன்தினம் கெப்பிட்டிக்கொலாவ பொலிஸார் கைது செய்தனர்.

அவர்களை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து மேலும் தெரியவருவதாவது, வெலிஓயாவிலுள்ள ஜனகபுரம் கிராம பகுதியில் மட்டுப்படுத்தப்பட்ட பறவைகள் சரணாலயத்தில் பெரும்போக விதைப்பு மேற்கொள்வதற்கு சென்ற விவசாயிகள் நான்கு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த 1956 ஆம் ஆண்டு 12 ஆயிரம் ஏக்கர் பரப்பில் பறவைகள் சரணாலயத்திற்கு உட்படுத்துவதாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட பகுதியில் கடந்த சில ஆண்டுகளாக விவசாய நடவடிக்கைக்குட்படுத்தப்பட்டு வருவதாக கிராம மக்கள் தெரிவித்திருந்தனர்.

முல்லைத்தீவு குடியிருப்பாளர்கள் சிலர் கடந்த இரண்டு ஆண்டுகளாக குறித்த பறவைகள் சரணாலயத்தின் எல்லைக்குட்பட்ட 200 ஏக்கரில் விவசாய செய்கைக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வந்தனர்.

பல வகையான பூர்வீக மற்றும் கவர்ச்சியான பறவைகள் சரணாலயத்தை அழிப்பது பெரும் சோகம் என்று தெரிவித்த கிராம மக்கள் மகாவலி மேம்பாட்டு ஆணையம் மற்றும் வனத்துறைக்கு சொந்தமான காடுகளில் விவசாயிகள் விவசாயத்தை மேற்கொண்டு வருவதாக கிராம மக்களிடமிருந்து கிடைத்த தகவல் தொடர்பாக நேற்று முன்தினம் நான்கு விவசாயிகளை வெலிஓயா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட விவசாயிகளை கெப்பிட்டிக்கொலாவ நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (5-7-299)

## இராசிபலன்

13.10.2020
புரட்டாதி 27, செவ்வாய்க்கிழமை
ஏகாதசி முற்பகல் 10.22 மணிவரை
மகம் முன்னிரவு 8.00 மணிவரை
சுபநேரம் 10.32-12.02 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை
சந்திராஷ்டமம் திருவோணம், அவிட்டம்,
ஏகாதசி விரதம்

வளவன்

**மேஷம்** – பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.

**ரிஷபம்** – விருந்தினர் வருகையுண்டு, வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், சுப செய்திகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்** – நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், உடன்பிறப்புகள் உங்கள் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவர், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**கடகம்** – குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்ச்சிகள் நடைபெறலாம், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், நன்மைகள் நடைபெறும் நாள்.

**சிம்மம்** – அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், போசன சுகமுண்டு.

**கன்னி** – ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சயன சுகக் குறைவு ஏற்படலாம், புதிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள்.

**துலாம்** – அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** – பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், செய்தொழில் மேன்மையுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**தனுசு** – உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், அரைகுறையாக இருந்த வேலைகளை மீதியும் தொடர்வீர்கள், குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும்.

**மகரம்** – சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை.

**கும்பம்** – மதிநுட்பத்தில் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மீனம்** – உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், உடல் நலனில் இருந்த பாதிப்புக்கள் அகலும், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

உணர்வு வேகமுள்ளது அறிவு விவேகமுள்ளது.

## கொரோனா சிகிச்சை வைத்தியசாலைகளில் இடப் பற்றாக்குறை

(கொழும்பு)

கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் 12 வைத்தியசாலைகளில் 253 படுக்கைகள் மாத்திரமே தற்போது எஞ்சியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயலணி வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் 12 பிரதான வைத்தியசாலைகளில் ஆயிரத்து 581 படுக்கை வசதிகள் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவற்றில் தற்போது ஆயிரத்து 328 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளதாக, கொரோனாத் தொற்று பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயலணி தெரிவித்துள்ளது.

அத்துடன், குறித்த வைத்தியசாலைகளில் அதிக படுக்கை வசதிகளைக் கொண்ட நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலையில் காணப்படும் 400 படுக்கைகளில் 157 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், 120 படுக்கை வசதிகளை கொண்ட கொழும்பு தேசிய தொற்றுநோய் தடுப்பு வைத்தியசாலையில் 160 பேர் இதுவரை அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, குறித்த வைத்தியசாலைகளில் தற்போது 253 படுக்கை வசதிகள் மாத்திரமே காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், வைத்தியசாலைகளில் காணப்படும் படுக்கைகளின் எண்ணிக்கையை 3 ஆயிரம் வரை அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுவதாக தொற்று நோய் தடுப்புப் பிரிவு முன்னதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கைத்துப்பாக்கியுடன் ஒருவர் கைது



(பதுளை)

பதுளை மாவட்ட நீதிமன்றத்தில் கடமையாற்றும் 37 வயதையுடைய சந்தேக நபரொருவரை கைத்துப்பாக்கியுடன் பதுளை பிராந்திய பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய் தனர்.

இதையடுத்து குறித்த நபரை நேற்று திங்கட்கிழமை பதுளை மாவட்ட நீதிமன்ற நீதவானிடம் முன்னிலைப்படுத்தியதையடுத்து தொடர்ந்து விளக்கமறியலில் வைத்து விசாரணை நடத்த பதுளை நீதிமன்ற நீதிபதி பணிப்புரை விடுத்தார்.

அவர் குறித்த கைத்துப்பாக்கியை மாத்தறை பிரதேசத்தை சேர்ந்த நபரொருவருக்கு 2 இலட்சம் ரூபாவுக்கு விற்கமுயன்ற சந்தர்ப்பத்தில் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். (ஐ)

## தொழிலாளர் திணைக்களத்தின் அனைத்து பொது சேவைகளும் பிராந்திய அலுவலகங்களூடாக

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் திணைக்களத்தின் அனைத்து பொது சேவைகளும் பிராந்திய அலுவலகங்கள் மூலம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் கொரோனா நிலைமை காரணமாக சேவைளைப் பெற பொதுமக்கள் நாரஹேன்பிட்டியில் உள்ள பிரதான அலுவலகத்திற்கு வர வேண்டிய அவசியமில்லை.

திணைக்களத்தின் பொது சேவைகள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் பரவலாக்கப்பட்டுள்ளன.

அதன்படி பிராந்திய அலுவலகங்களிலிருந்து பொருந்தமான சேவைகளை பெறுமாறும் திணைக்களம் பொது மக்களுக்கு அறிவித்துள்ளது. (ஐ)

## பி.சி.ஆர்.பரிசோதனைகள்

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமானநிலைய சரக்குப் பிரிவில் பணியாற்றி வரும் ஊழியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டதைத் தொடர்ந்து அங்கு பணியாற்றிவரும் 50 ஊழியர்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஐ-7)

## ரயில் பயணிகளுக்கு இலவச பி.சி.ஆர்.

(கொழும்பு)

கோட்டை ரயில் நிலையத்துக்கு வரும் ரயில் பயணிகளுக்காக நேற்று இலவச பி.சி. ஆர்.பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. கோட்டை ரயில் நிலையத்தின் மூன்றாம் மேடையில் இந்த இலவச பி.சி.ஆர்.பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. (ஐ)

## முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் மேலும் ஏழு பேருக்கு கொரோனா

(கொழும்பு)

கட்டுநாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் மேலும் ஏழு பணியாளர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

அதற்கமைய கட்டுநாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் இதுவரையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானோரின் மொத்த எண்ணிக்கை 24 ஆக அதிகரித்துள்ளது. (ஐ)

## கொழும்பு தொடர் மாடிக்குடியிருப்பில் ஒருவருக்கு கொரோனா

(கொழும்பு)

கொழும்பு கொம்பனி தெருவில் அமைந்துள்ள ஆடம்பர தொடர்மாடி குடியிருப்பொன்றில் கொரோனா வைரஸ் நோயாளியொருவர் அடையாளம் காணப்பட்டுள்ளதை தொடர்ந்து அந்த தொடர்மாடியின் செயற்பாடுகள் முற்றாக முடக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மறு அறிவித்தல் வரும்வரை வெளியிலிருந்து எவரும் தங்களது தொடர்மாடிக்கு வருவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாக குறித்த குடியிருப்பில் வசிப்பவர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)

# பாராளுமன்றத் தேர்தலில் வாக்கெண்ணல் எவ்வாறு நடைபெறுகிறது?

(நீங்களும் அறிந்து கொள்ளுங்கள்)

08

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.




**கேள்வி 18:**-வாக்கெண்ணலின் இரண்டாம் கட்டத்தின் இரண்டாம் உபகட்ட நடபடிகள் என்ன?

**பதில்:**- வாக்கெண்ணலின் இரண்டாம் கட்டத்தின் இரண்டாம் உபகட்ட நடபடிகள் (கட்சி ரீதியாக வாக்குச் சீட்டுக்களை எண்ணல்)

வாக்கெண்ணலின் இரண்டாம் கட்டத்தின் இரண்டாம் உபகட்டத்திற்கு வாக்கெண்ணல் மேசையையும் அறையையும் ஒழுங்குபடுத்தும் முறையைப் படம்-6 காட்டுகிறது. இரண்டாம் உபகட்டத்தில் வாக்கெண்ணல் மேசையைச்சூழ அமர்ந்துள்ள பணியாட் குழுவினர்கள் 5 குழுக்களாகப் பிரிக்கப்படுவர்.

மேசையை 5 பிரிவுகளாகப் பிரிப்பதற்காக முன்பு போலவே கம்புத் தடிகள் அல்லது கடின மட்டைகள் பயன்படுத்தப்படும். ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் நியமிக்கப்படுவர். இந்த உப கட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற மீள் தெரிவு அதாவது முதலாம் (கட்டத்) தெரிவின் பிழையற்ற தன்மையைப் பரிசீலித்தல் மற்றும் எண்ணப்பட்ட வாக்குச் சீட்டுகளை மீளப்பரிசீலித்தல் சிரேஷ்ட பணியாட் குழுவொன்றின் மூலம் மேற்கொள்ளப்படும்.




*படம்-6 வாக்கெண்ணலின் இரண்டாம் கட்டத்தின் இரண்டாம் உபகட்டம்*

(அ) மீள் தெரிவு அல்லது முதல் தெரிவின் பிழையற்ற தன்மையைப் பரிசீலித்தல்.

படம்-6 இன் பகுதி E இல் முதலாம் உபகட்டத்தில் அதாவது முதல் தெரிவில் ஒவ்வொரு கட்சி மற்றும் சுயேட்சைக் குழுவுக்காக தெரியப்பட்ட வாக்குச்சீட்டுக்கள் மீள் தெரிவு அல்லது முதல் தெரிவின் பிழையற்ற தன்மையைப் பரிசீலித்தல்.

(ஆ) ஐம்பது (50) வாக்குச் சீட்டுக்களைக் கொண்ட கட்டுக்களாகத் தயாரித்தல்.

படம்-6 இன் பகுதி D இல் ஒவ்வொரு கட்சி / சுயேட்சைக் குழுவுக்குரிய வாக்குச் சீட்டுக்களை வெவ்வேறாக எண்ணி ஐம்பது (50) வாக்குச்சீட்டுக்களைக் கொண்ட கட்டுக்களாகத் தயாரித்தல்.

(இ) ஒவ்வொரு வாக்குச்சீட்டுக் கட்டினதும் பிழையற்ற தன்மையைப் பரிசீலித்தல்.

படம்-6 இன் பகுதி C இல் ஒவ்வொரு வாக்குச் சீட்டுக் கட்டிலுமுள்ள வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கையை சரிபார்ப்பதும் மற்றும் அவ் வாக்குச் சீட்டுக் கட்டிலுள்ள வாக்குச் சீட்டுக்கள் உரிய கட்சிக்கு / சுயேட்சைக் குழுவுக்கு அடையாளமிடப்பட்ட வாக்குச்சீட்டுக்களா எனப் பரிசீலனை செய்தல்.

(ஈ) மீள் பரிசீலனை செய்தல் - படம்-6 இன் பகுதி B இல் மேலுள்ள பந்தி (இ) இல் கூறப்பட்டுள்ள விடயங்களை மீள் பரிசீலித்தல்.

(உ) எழுமாற்றுப் பரிசீலனை - படம்-6 இன் பகுதி A இல் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் ஓரிரு வாக்குச் சீட்டுக் கட்டிலுள்ள வாக்குச் சீட்டுக்கள் எண்ணிக்கையை சரிபார்த்தல் மற்றும் உரிய கட்சிக்கு / சுயேட்சைக் குழுவுக்கு அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டுக்களா என எழுமாற்றுப் பரிசீலனை செய்யப்படும்.

இதற்கு மேலதிகமாக தலைமை வாக்கெண்ணும் அலுவலரினால் ஐந்நூறு (500) வாக்குச் சீட்டுக்களைக் கொண்ட கட்டுகளாகத் தயாரித்து பரிசீலித்ததன் பின்னர் பரிசீலனை முடிவுக்கு வரும். இந்நடபடிகளை படம்-7 காட்டுகிறது.

**படம்-7 இரண்டாம் கட்டத்தின் 2 ஆம் உபகட்டம்**
**கட்சி ரீதியாக வாக்கெண்ணலின் நடபடிகள்**

(அ) மீள் தெரிவு அல்லது முதல் தெரிவின் பிழையற்ற தன்மையைப் பரிசீலித்தல்

↓

(ஆ) வாக்கெண்ணல் - ஐம்பது (50) வாக்குச் சீட்டுக்களைக் கொண்ட கட்டுக்களாகத் தயாரித்தல்

↓

(இ) வாக்குச் சீட்டுக்கள் 50ஐக் கொண்ட கட்டுக்களை பரிசிலித்தல்

↓

(ஈ) மீள் பரிசிலனை அல்லது அதியுயர் பரிசிலனை

↓

(உ) எழுமாற்றுப் பரிசிலனை

↓

(ஊ) இறுதிப் பரிசிலனை

**வாக்கெண்ணலின் இரண்டாம் கட்டத்தின் இரண்டாம் உபகட்ட நடபடிகளின் விரிவான விளக்கம்**

மேற்கூறப்பட்ட பந்தி (அ) தொடக்கம் (ஊ) வரையுள்ள பந்திகளை விரிவாகப்பார்ப்போம்.

(அ) மீள் தெரிவு அல்லது முதல் தெரிவின் பிழையற்ற தன்மையைப் பரிசீலித்தல். (படம் 6 இல் E பகுதி)

இரண்டாம் கட்டத்தின் இரண்டாம் உபகட்டம் செயற்படுத்தப்படுகின்றபோது வாக்குச் சீட்டுக்கள் மொத்தமாக இடப்படுகின்ற பெரிய பெட்டி வைக்கப்பட்டுள்ள வாக்கெண்ணல் மேசையின் விளிம்பிற்கு அருகில் அமர்ந்திருக்கின்ற பதவி நிலை அலுவலர்கள் உள்ளிட்ட அனுபவம் வாய்ந்த உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய கிட்டத்தட்ட 10-12 பேரை உள்ளடக்கிய ஒரு குழுவினால் மீள் தெரிவு மேற்கொள்ளப்படும்.

தலைமை வாக்கெண்ணும் அலுவலரின் மேசை மீது வைக்கப்பட்டுள்ள வாக்குச்சீட்டுகள் இடப்படுகின்ற பெட்டிகளுக்குப் பொறுப்பாகவுள்ள உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் முதல் தெரிவின் போது தெரிவு செய்யப்பட்ட வாக்குச்சீட்டுகளை போதிய அளவில் இவ்வலுவலர் குழுவிற்கு வழங்கப்படும். இவ்வலுவலர்கள் இவ்வாக்குச்சீட்டுக்களை மீள் பரிசீலனை செய்து முதல் தெரிவின் பிழையற்ற தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வார்கள்.

இங்கு முதலில் மீள் தெரியப்பட வேண்டியவை பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்றுள்ளதாக புலப்படுகின்ற கட்சியின் அல்லது சுயேட்சைக்குழுவின் வாக்குச்சீட்டுக்களாகும்.

இக்குழுவினால் வாக்குச்சீட்டுகள் ஒவ்வொன்றாக மீள் பரிசீலிக்கப்பட்டு தெரிவு சரியானதென உறுதிப்படுத்தப்படுகின்ற வாக்குச்சீட்டுகள் வாக்கெண்ணும் பிரிவுக்கு அனுப்பப்படும்.

(தொடரும்)

# கொரோனாவுடன் வாழப் பழக வேண்டும்

## சுதத் சமரவீர அறிவுரை



(கொழும்பு)

**கொவிட்-19 வைரஸ் உலகளாவிய தொற்றுநோய் என்றும் அதை இலங்கையில் மட்டும் கட்டுப்படுத்துவதன் மூலம் அதை முற்றிலுமாக ஒழிக்க முடியாது என்றும் தொற்று நோயியல் நிபுணர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் தகவல் வெளியிட்டுள்ள அவர், "கொவிட்-19 ஒரு உலகளாவிய தொற்றுநோய். அது இன்று அல்லது நாளை முடிவடையும் ஒன்று அல்ல. நம் நாட்டில் மட்டும் இதைக் கட்டுப்படுத்தி சுதந்திரமாக வாழ முடியாது. அதனால் தான் கொவிட்-19 உலகில் ஒழிக்கப்படும் வரை நாம் கொவிட்-19 உடன் வாழ பழக வேண்டியிருக்கும்.

முன்பு போல் நாடு முழுவதும் முழுமையான ஊரடங்கு உத்தரவை விதித்து, சமூக செயல்பாட்டைக் கட்டுப்படுத்தி முடிவுக்குக் கொண்டு வருவதன் மூலம் இந்த கொவிட் -19 நோயை நாம் தொடர்ந்து எதிர்கொள்ள முடியாது. மக்களின் இயல்பான வாழ்க்கையைக் கருதுகையில் கொவிட் -19 நோயைக் கட்டுப்படுத்துவது முக்கியமான ஒன்றாகும்.

க.பொ.த (உயர்தரம்) தேர்வு தொடங்கி ஒரு மாதத்திற்கு நடைபெறும். எனவே குழந்தைகள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர் இதில் பெரிய பங்கை வகிக்கின்றனர்.

வைத்தியசாலைகளில் இருப்பவர்கள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்களில் இருக்கும் மாணவர்களுக்கு தேர்வுக்கு எழுத வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, கொவிட்-19 தொற்று காலத்திலும் நாட்டின் குழந்தைகளின் எதிர்காலத்தை மிக வெற்றிகரமாக தீர்மானிக்கும் ஒரு தேர்வினை நடத்துவதே இந்த நேரத்தில் உள்ள சவால்" என்றார். (ஜ-4)

## அவசிய தேவைகள் எதுவுமின்றி கொழும்பு வர வேண்டாம்

(கொழும்பு)

அத்தியாவசிய தேவையின்றி கொழும்பிற்கு வர வேண்டாம் என கொழும்பு நகர சபையின் பிரதான சுகாதார வைத்திய அதிகாரி ருவன் விஜயமுனி தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு முறையும் உங்களுக்கு முன்னாலுள்ளவரை கொரோனா நோயாளியாகவே சந்தேகத்துடன் பாருங்கள்.

தேவையற்ற விடயத்தை தவிர்த்து இந்த நேரத்தில் அடிக்கடி கொழும்பு நகரத்திற்கு வர வேண்டாம்.

வெளியில் செல்லும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொருவரும் முகக்கவசம் அணிவது கட்டாயமாகும்.

அனைவரும் சுகாதார பழக்கங்களை கடைப்பிடிப்பது கட்டாயமாகும். வெளியே செல்லும் ஒவ்வொரு முறையும் சமூக இடைவெளியை கடைப்பிடித்து செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-7)

## என்னுடன் 'செல்பி' எடுக்க வேண்டாம் ஆதிவாசிகளின் தலைவர் தகவல்

(கொழும்பு)

தம்பான பகுதிக்குச் சுற்றுலா வருபவர்கள் தன்னுடன் செல்பி எடுக்க வேண்டாம் என ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னில எத்தோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன் தம்பானைக்கு வரும் சுற்றுலா பயணிகள், கட்டாயமாக முகக்கவசம் அணிந்து வருவதுடன் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (நி-7)

## ஒருவருக்கு தொற்று வங்கி தற்காலிக நிறுத்தம்

(கொழும்பு)

என்.டி.பி (NDB)வங்கியின் கொழும்பு 04 இல் அமைந்துள்ள கிளை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக குறித்த வங்கி அறிவித்துள்ளது.

என்.டி.பி.வங்கியின் குறித்த கிளையின் ஊழியர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில், வங்கியின் ஊழியர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அந்த ஊழியர் மினுவாங்கொடையில் வசிப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-7)


## பிரதேச தொழில் திணைக்களங்கள் ஊடாக சேவைகளை பெற்றுக் கொள்ள வசதி

(கொழும்பு)

தொழில் திணைக்களத்தின் அனைத்து சேவைகளையும், பிரதேச தொழில் திணைக்களங்கள் ஊடாக பெற்றுக் கொள்ள வழிசமைத்துள்ளதாக, தொழில் ஆணையாளர் நாயகம் ஏ.விமலவீர தெரிவித்துள்ளார்.

எனவே, பொதுமக்கள் தமக்கான சேவைகளைப் பெற்றுக் கொள்ள பிரதான காரியாலயத்துக்கு வருகைதர வேண்டியது அவசியமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-7)

## பாக்கு விலையில் மாற்றம்



(கொழும்பு)

கடந்த நாட்களில் 20 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட பாக்கு ஒன்றின் விலையானது தற்போது குறைந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது சந்தைகளில் 10 தொடக்கம் 15 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற வானிலை காரணமாகவே பாக்கின் விலை கடந்த காலங்களில் அதிகரித்து காணப்பட்டதாக தம்புள்ளை பொருளாதார மத்திய நிலைய வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (ஜ)

## கடந்த முறையை விட வேகமாக பரவும் கொரோனா



(கொழும்பு)

கடந்த முறையை விட இம்முறை நாட்டில் கொரோனா வைரஸ் பரவலின் வேகம் அதிகமாக காணப்படுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் அனுருத்த பாதெனிய தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், கடந்த முறையை விடவும் இம்முறை நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் வேகமாக காணப்பட்டாலும், நாட்டை முடக்காமல் இருப்பதற்கு அறிவியல் காரணம் காணப்படுகிறது.

அதன்படி இம்முறை கொரோனா வைரஸ் தொற்றினை எதிர்கொள்வதற்கான தயார் நிலையில் அரசாங்கம் இருப்பதுடன், சுகாதாரத்துறையும் நோய்ப்பரவலை தடுப்பதற்கு தேவையான முழுமையான நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

அத்துடன் மக்களும் இந்த தொற்றிலிருந்து தம்மை பாதுகாத்து கொள்வதற்கான பாதுகாப்பு வழிமுறைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த முறையை விட இம்முறை குறித்த வைரஸ் பரவல் தொடர்பான விழிப்புணர்வு அதிகமாக காணப்படுகிறது.

இதனாலேயே கடந்த முறை சிறியளவிலான பரவல் காணப்பட்ட போதே நாடு முடக்கப்பட்டது.

எனினும் இம்முறை வேகமான பரவல் இருக்கும் போதும் நாடு முடக்கப்படாமல் இருப்பதற்கான காரணமாகும் எனக் குறிப்பிட்டுள்ளார். (ஜ)

## பாரதம்

# உலகளவில் எகிறும் கொரோனாத்

## அச்சத்தின் உச்சத்தி



“(ஜெனிவா)

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குத லுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 10 இலட்சத்து 81 ஆயிரத்தைக் கடந்தது.”

சீனாவில் ஹூபேய் மாகாணத்தில் வுஹான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த வைரஸ் உலகின் 213 நாடுகளுக்குப் பரவி பெரும் மனிதப் பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

இந்நிலையில் தற்போதைய நிலவரப்படி உலகம் முழுவதும் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 3 கோடியே 77 இலட்சத்து 73 ஆயிரத்து 829 ஆகும்.

ஐரோப்பிய நாடுகளில் நாளொன்றுக்கான கொரோனா வைரஸ் நோய்த்தொற்று எண்ணிக்கை திடீரென அதிகரித்து வருவது சர்வதேச அளவில் எண்ணிக்கையை அதிகபட்சமாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பிரேசிலில் கொரோனாத்தொற்று ஒரு இலட்சத்து 50 ஆயிரத்தை கடந்தது

(பிரேசிலியா)

பிரேசில் நாட்டில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 50 ஆயிரத்து 198 ஆக அதிகரித்துள்ளது.

உலக அளவில் கொரோனா வைரஸால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட நாடுகளில் பிரேசிலும் ஒன்று. லத்தின் அமெரிக்க நாடுகளில் அதிக கொரோனா நோயாளிகள் மற்றும் உயிரிழப்புகளை கொண்ட முதல் நாடாகவும் பிரேசில் உள்ளது. இந்த நிலையில் கடந்த சில வாரங்களாக பிரேசிலில் கொரோனா உயிரிழப்புகள் தொடர்ந்து அதிகரித்த வண்ணம் உள்ளன. அங்கு தினசரி கொரோனா உயிரிழப்பு 500 இற்கும் அதிகமாக இருந்து வருகிறது.

அதன்படி நேற்று முன்தினம் அங்கு ஒரே நாளில் 559 பேர் கொரோனாவுக்கு பலியாகினர். இதன்மூலம் அந்த நாட்டில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 50 ஆயிரத்து 198 ஆக அதிகரித்துள்ளது.

அதேபோல் புதிதாக 26 ஆயிரத்து 749 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டு இருப்பதன் மூலம் மொத்த பாதிப்பு 50 இலட்சத்து 82 ஆயிரத்து 637 ஆக உயர்ந்துள்ளது. (நி)

# காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகிய குஷ்பு



(சென்னை)

பிரபல நடிகை குஷ்பு பாரதிய ஜனதா கட்சியில் இணைய உள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ள நிலையில், காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் பொறுப்பில் இருந்து அவர் நீக்கப்படுவதாக அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி நேற்று அறிவித்துள்ளது.

இதனிடையே காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கு கடிதம் ஒன்று எழுதியுள்ள குஷ்பு தாம் காங்கிரஸ் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்து விலகுவதாக தெரிவித்துள்ளார். (நி)

# குளிர் காலத்தில் கொரோனா வைரஸின் வீரியம் அதிகரிக்கும்

## ஹர்ஷவர்தன்



(டில்லி)

குளிர்காலத்தில் கொரோனா வைரஸின் வீரியம் அதிகரிக்கும் என்பதால் மக்கள் முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என மத்திய சுகாதார அமைச்சர் ஹர்ஷவர்தன் வலியுறுத்தியுள்ளார்.

"பண்டிகைகளை அனைவரும் வீடுகளுக்குள்ளேயே தங்களுக்கு அன்பானவர்களுடன் சேர்ந்து கொண்டாட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பண்டிகையின் பெயரால் வெளியே கண்காட்சிகள், பந்தல்கள் என்று யாரும் செல்லக் கூடாது. இப்போது கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராக போராடுவதுதான் அனைவரின் முதன்மையான தர்மமாக இருக்க வேண்டும்.

கொரோனாத் தடுப்பூசியின் அவசரகால பயன்பாட்டுக்கு மத்திய அரசு அங்கீகாரம் அளிக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

தற்போது கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் முதலாவது, இரண்டாவது மூன்றாவது கட்ட மருத்துவ பரிசோதனைகளில் உள்ளன. அவற்றின் முடிவுகளுக்காக காத்திருக்கிறோம்.

கொரோனா வைரஸ் ஒரு சுவாச வைரஸ். குளிர்கால நிலையில் இந்த வைரஸ்களின் பரவுதல் அதிகரிக்கும் என தெரிகிறது.

குளிர்கால நிலை குறைந்த ஈரப்பதம் உள்ள சூழலில் சுவாச வைரஸ்கள் நல்ல வளர்ச்சியை பெறுகின்றன. எனவே மனதில் அனைவரும் கொள்ள வேண்டிய ஒரு அம்சம் உண்டு.

அது குளிர்காலத்தில் குடியிருப்புகளில் அதிகமாக கூட்டம் கூடுகிறபோது பரவல் அதிகரிக்கலாம் என்பதுதான். எனவே இந்த சூழலில் குளிர்காலத்தில் தொற்று பரவல் அதிகரிக்கலாம் என்று கருதுவது தவறல்ல என அவர் குறிப்பிட்டார். (நி)

# புலம்பெயர்ந்தோ கடலில் கவிழ்ந்



(மொஸ்கோ)

ஆபிரிக்க நாடுகளை சேர்ந்த புலம்பெயர்ந்தோர் சென்ற படகு துனிஷிய கடற்பகுதியில் கவிழ்ந்ததில் குழந்தைகள் உட்பட 11 பேர் உயிரிழந்தனர்.

ஆபிரிக்க நாடுகளில் வாழும் மக்கள் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில், தங்களது நாடுகளை விட்டு ஐரோப்பியா உள்ளிட்ட வேறு நாடுகளை நோக்கி அகதிகளாக புலம்பெயர்வது வாடிக்கையாக நடந்து வருகிறது. அவர்கள் ஆபத்து நிறைந்த கடல்வழிப் பயணங்கள் மேற்கொள்கின்றனர். இதனால் பல நேரங்களில் விபத்து ஏற்பட்டு உயிர்ப்பலி ஏற்படுகிறது. இதுபோன்று ஆபத்து நிறைந்த கடல்வழி பயணங்களை மேற்கொள்ள வேண்டாம் என எச்சரிக்கை விடப்பட்ட போதிலும் பலர் அதனை கவனத்தில் கொள்வதில்லை.




# வெளிநாடு



## தொற்று

## ல் மக்கள்



## ரூபாய் நோட்டுகளில் அதிககாலம் கொரோனா உயிர்வாழும் - அதிர்ச்சிதரும் ஆய்வின் முடிவு

(சிட்னி)

ரூபாய் நோட்டுகள், செல் போன்கள், எவர்சில்வர் போன்ற பரப்புகளில் கொரோனா வைரஸ் ஒரு மாதம் வரை உயிர்வாழும் என அண்மைய ஆய்வில் தெரியவந்துள்ளது.

உலகை அச்சுறுத்தி வரும் கொடிய வைரஸான கொரோனா வைரஸ் குறித்த ஆய்வுகளில் தொடர்ந்து பல்வேறு தகவல்கள் வெளியான வண்ணம் உள்ளன.

கொரோனா வைரஸ் எந்தெந்த பரப்புகளில் எத்தனை நாட்கள் வரை உயிர்வாழும் என்பது தொடர்பாக பல்வேறு நாடுகளின் விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தி அவ்வப்போது முடிவுகளையும் ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றனர்.

அவ்வகையில் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த சி.எஸ்.ஐ.ஆர்.ஓ.என்ற அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம் அண்மையில் நடத்திய ஆய்வில், கொரோனா வைரஸ், ரூபாய் நோட்டுகளில் 28 நாட்கள்வரை உயிர் வாழும் என தெரியவந்துள்ளது. செல் போன் ஸ்கிரீன்கள், எவர்சில்வர் பொருட்களிலும் 28 நாட்கள் வரை உயிர்ப்புடன் இருக்கும் என ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். மேலும் மிக குறைந்த வெப்பநிலையில் இந்த வைரஸ் அதிக நாட்கள் உயிர் வாழ்வதாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.



கொட்டன் போன்ற துணிகளில் உயிர்வாழும் காலத்தை விட, கண்ணாடி, எவர்சில்வர் உள்ளிட்ட பளபளப்பான பரப்புகளில் அதிக காலம் உயிர் வாழ்கிறது.

வெப்பநிலையை 20 டிகிரி, 30 டிகிரி, 40 டிகிரி என வெவ்வேறு அளவுகளில் வைத்து வைரஸ் படிந்த பொருட்களை ஆய்வு செய்துள்ளனர். நேரடி சூரிய ஒளி வைரஸை விரைவாக செயலிழக்கச் செய்யும் என்று ஏற்கனவே ஆராய்ச்சி நிரூபித்துள்ளதால், புற ஊதா ஒளியின் விளைவை அகற்றும் வகையில், இருட்டில் இந்த புதிய ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது. இதில், 20 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் 28 நாட்கள் வரை கொரோனா வைரஸ் உயிர்வாழ்ந்தது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வு முடிவுகள் வைராலஜி ஜர்னலில் மருத்துவ இதழில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த நோய் பரவலைத் தடுக்கவும் ஆபத்தை குறைக்கும் நடைமுறைகளை மேம்படுத்தவும் ஆய்வின் முடிவுகள் உதவும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)



## கொரோனா அச்சம் முடங்கியது லெபனான்

(பெய்ரூட்)

லெபனானில் மீண்டும் கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்றின் பரவல் அதிகரித்துள்ள நிலையில், அங்குள்ள 169 நகரங்கள் மற்றும் கிராமங்களில் முழு பொது முடக்கத்தை லெபனான் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக உட்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'திடீரென தீவிரமாகியுள்ள கொரோனா நோய்த் தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக 169 நகரங்கள் மற்றும் கிராமங்களில் பொது முடக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிவிப்பு நேற்று முதல் அமுலுக்கு வருகிறது. எதிர்வரும் 19 ஆம் திகதி வரை அந்த பொது முடக்கம் அமுலில் இருக்கும்.

இது தவிர, நாடு முழுவதிலும் உள்ள மதுபான வீதிகள், இரவு விடுதிகள் மீள் அறிவிப்பு வரை மூடப்படும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## ார் சென்ற படகு ந்து 11 பேர் பலி



இந்நிலையில், ஆபிரிக்காவின் பல நாடுகளை சேர்ந்த சிலர் படகு ஒன்றில் புறப்பட்டு கடல்வழி பயணம் மேற்கொண்டுள்ளனர். அவர்கள் சென்ற படகு துனிஷிய கடற்கரை பகுதியருகே ஸ்பாக்ஸ் நகரில் இருந்து சற்று தொலைவில் வந்தபோது திடீரென கடலில் கவிழ்ந்தது. இதில் படகில் இருந்தவர்களில் பலர் நீச்சல் தெரியாமல் நீரில் மூழ்கி தத்தளித்தனர். இதுபற்றி தகவல் அறிந்ததும் கடலோர பொலிஸ் படையினர் சம்பவ பகுதிக்கு சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

இந்த விபத்தில் நீரில் மூழ்கி உயிரிழந்தவர்களில் 11 பேரின் உடல்களை இது வரை மீட்டுள்ளனர். அவர்களில் 2 பேர் குழந்தைகள் ஆவர். இது தவிர 7 பேரை மீட்பு குழுவினர் உயிருடன் மீட்டுள்ளனர். தொடர்ந்து தேடுதல் மற்றும் மீட்பு பணி நடைபெற்று வருகிறது. (நி)

## லிபியாவில் கடத்தப்பட்ட 7 இந்தியர்கள் விடுவிப்பு

(திரிபோலி)

லிபியாவில் கடத்தப்பட்ட 7 இந்திய தொழிலாளர்கள் விடுவிக்கப்பட்டனர்.

வட ஆபிரிக்காவில் உள்ள லிபியாவில் ஏராளமான வெளிநாட்டு தொழிலாளர்கள் வேலை பார்த்து வருகிறார்கள். அங்கு இந்தியாவை சேர்ந்த தொழிலாளர்களும் பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றி வருகின்றனர்.

லிபியாவில் பயங்கரவாதிகளின் ஆதிக்கம் உள்ளது. அடிக்கடி வெளிநாட்டு தொழிலாளர்களை கடத்திச் சென்று பணம் கேட்டு மிரட்டி வருகின்றனர்.

இதற்கிடையே, லிபியாவில் பணிபுரிந்து வந்த 7 இந்திய தொழிலாளர்களை பயங்கரவாதிகள் கடத்திச் சென்று உள்ளனர். அவர்களை விடுவிக்க வேண்டுமென்றால் 20 ஆயிரம் அமெரிக்க டொலர் வழங்க வேண்டும் என்று அவர்கள் பணிபுரிந்த நிறுவனத்துக்கு மிரட்டல் விடுத்திருக்கிறார்கள்.



கடத்தப்பட்ட இந்தியர்களில் ஒருவர் முன்னா சவுகான். இவர் உத்தரபிரதேச மாநிலம், குஷி நகர் மாவட்டம், கர்ஹியா பசந்த்பூர் கிராமத்தை சேர்ந்தவர். அவர் கடத்தப்பட்டது குறித்து உறவினர் லாலன் பிரசாத் டில்லி பொலிஸில் புகார் செய்துள்ளார்.

லிபியாவில் கடத்தப்பட்டுள்ள 7 இந்தியர்களை மீட்க இந்திய வெளியுறவுத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டு இருந்தது.

லிபியாவில் இந்திய தூதரகம் அமைக்கப்படவில்லை என்பதால் துனீசியா தூதரகம் மூலம் இந்தியர்களை மீட்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில், லிபியாவில் கடத்தப்பட்ட 7 இந்திய தொழிலாளர்களும் பத்திரமாக விடுவிக்கப்பட்டனர் என துனீசியா நாட்டு இந்திய தூதரக அதிகாரி புனீத் ராய் தெரிவித்துள்ளார். (நி)

# பாரியளவு நிலத்தை சுவீகரித்தது தொல்லியல் திணைக்களம்



(திருமலை)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள தமிழர் தாயக பிரதேசத்தை புவியியல் ரீதியாக பிரித்து நிற்கும் மையப்புள்ளியான தமிழ் மக்களின் பழைமை வாய்ந்த கிராமமான தென்னைமரவடி கிராமத்தில் 358 ஏக்கர் நிலத்தை புல்மோட்டை அரிசிமலை பகுதியில் இருக்கின்ற பௌத்த பிக்குவின் வேண்டுகோளின் அடிப்படையில் தொல்லியல் திணைக்களம் சுவீகரித்து எல்லை கற்களை நாட்டியுள்ளதாக தென்னமரவடி மக்கள் தெரிவித்துள்ளனர் .

கடந்த மாதம் 24 ஆம் திகதி பனிக்கவயல் தொடக்கம் தென்னமரவடி வரையான 358 ஏக்கர் காணிகளை அபகரித்து தமிழ் மக்களுக்கு சொந்தமான வயல் நிலங்களையும் உள்ளடக்கி தொல்லியல் திணைக்களத்தால் எல்லை கற்கள் இடப்பட்டு வருவதை அறிந்து அப்பகுதிக்குச் சென்ற தென்னமரவடி மக்கள் தொல்லியல் திணைக்கள உத்தியோகத்தர்களிடம் கேள்வி எழுப்பிய நிலையில் அரிசிமலை பிக்குவின் வேண்டுகோளின் அடிப்படையில் தொல்லியல் பிரதேசமாக அடையாளபடுத்தப்பட்டு எல்லைக்கற்கள் இடப்படுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

செய்கை பண்ணுவதற்காக தயார்படுத்தப்பட்ட வயல்களுக்கு நடுவே கூட எல்லை கற்கள் நடப்பட்டுள்ளது. இவ்வாறு அபகரிக்கப்பட்ட 358 ஏக்கர் பரப்பில் தென்னமரவடி கிராமத்தின் ஆரம்பத்தில் பௌத்த விகாரை ஒன்றுக்கான ஆரம்பகட்ட வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டு சிவில் பாதுகாப்புப் படையினரும் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டுள்ளனர். (நி-7)

# நரிக்கடிக்கு ஆளான யுவதி வைத்தியசாலையில்

(கொழும்பு)

களுத்துறை-அகலவத்தை பகுதியில் 55 வயதான பெண் ஒருவரை நரி கடித்ததை. அடுத்து அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் நேற்று முன்தினம் மாலை இந்தச் சம்பவம் நேர்ந்ததாகவும் இதனையடுத்து குறித்த பெண் வேத்தேவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு கடந்த வியாழக்கிழமை ஹொரணை-மீமனபலான பகுதியில் நரிக் கடிக்கு உள்ளான ஒரு வயது பெண் குழந்தை சிகிச்சைக்காக ஹொரணை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் பிரதேசவாசிகள் இணைந்து குறித்த நரியை அடித்துக் கொலை செய்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறாக தொடர்ந்தும் நரியின் அச்சுறுத்தல் நிலவுவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

உரிய அதிகாரிகள் இதற்கான தீர்வை பெற்றுத்தர வேண்டும் எனவும் மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கொரோனாத் தொற்று அச்சத்துக்கு மத்தியில் இவ்வாறு மனிதர்களை நரியும் வேட்டையாடுவது வருந்துவதற்குரிய விடயமாகக் காணப்படுகின்றது. மேலும் குறித்த பகுதி மக்களைக் கூடிய கவனத்துடன் செயற்படுமாறு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. (நி-7)

# சிறைச்சாலை கைதிகளுக்கும் பி.சி.ஆர்.பரிசோதனைகள்

(கொழும்பு)

சிறைச்சாலையில் உள்ள கைதிகளிடம் பி.சி.ஆர்.சோதனைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே இதற்கான உத்தரவினை சிறைச்சாலை ஆணையாளர் ஜெனரலுக்கு வழங்கியுள்ளார்.


கொரோனா வைரஸ் நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலைகளிலும் கைதிகள் மத்தியில் வைரஸ் பரவாமல் தடுக்கும் வகையிலும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி-7)

# பாழடைந்த கிணற்றுக்குள் விழுந்த யானை

(திருகோணமலை)

திருகோணமலை - ஹொரவ்பொத்தானை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திம்பிரியத்தாவெல பகுதியில் காட்டு யானை ஒன்று பாழடைந்த கிணற்றுக்குள் விழுந்துள்ளது.

காட்டுயானைகளின்தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் நேற்று ஊருக்குள் புகுந்த காட்டு யானை பாழடைந்த கிணற்றுக்குள் விழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



குறித்த யானையை மீட்குமாறு பொலிஸாரிடமும் வன பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளிடமும் கிராம மக்கள் தெரியப்படுத்தியுள்ளனர். (நி-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஞானியர் நிலை

ஒரு குரு இருந்தார். ஜென் குரு.

அவரிடம் ஒரு பழக்கம். வேற என்ன அப்பப்ப கொஞ்சம் திருடுவார்... அவ்வளவுதான்! பெரிதாக ஒன்றும் திருட மாட்டார்... அவர் ஈடுபடுவது எல்லாம் சின்ன சின்ன திடுட்டுத்தான்!

அடுத்தவர்களுக்கு சொந்தமான சின்ன சின்ன பொருட்களை திருட வேண்டியது – மாட்டிக்க வேண்டியது – சிறைக்குப் போக வேண்டியது – விடுதலையானதுக்கு அப்புறம் மறுபடியும் திருட்டு ... இதுவே பழக்கமாகி விட்டது அவருக்கு.

அவருடைய சீடர்களுக்கு இது ஒரு பெரிய புதிர். நம்ம குரு ஒரு பெரிய ஞானி. அவர் இப்படி பண்ணுராரே என்று நினைக்கும் போது ரொம்ப ஆச்சரியமாக இருந்தது. ஏன் இப்படி செய்கிறார் என்று ஒன்றும் புரியவில்லை... பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார்கள்... ஒரு நாள் கேட்டே விட்டார்கள்.

“ஏன் சுவாமி இப்படிச் செய்கிறீர்கள்? செருப்பைக் கூட திருடனுமா நீங்க? உங்களுக்கு என்ன தேவை என்பதை எங்களிடம் சொன்னால் ஒரு செருப்புக் கடையை வாங்கி வந்து குவிக்க மாட்டோமா? ஏன் இப்படி பண்றீங்க? என்ன ஆனது உங்களுக்கு? ”அப்படி என்று கேட்டார்கள்.

அதுக்கும் ஒரு சிரிப்புத்தான். சிரித்துக் கொண்டே பேசாமல் சென்று விட்டார் குரு.

அதற்குப் பின்பும் அவர் வழக்கத்தை நிறுத்தவில்லை... திருடுவது... மாட்டிக்கொள்வது – சிறைக்குப் போவது. சீடர்கள் கேட்டால்... சிரித்துக் கொண்டே செல்வது. இப்படி அவர் காலம் ஓடிப் போனது! கடைசியில் ஒரு நாள் அவர் மரணப் படுக்கையில் இருக்கிறார். பக்கத்தில் அவர் சீடர்கள் எல்லாம் சுற்றி நின்று கொண்டு இருக்கிறார்கள்.

இப்பொழுதாவது நம்ம குரு உண்மையைச் சொல்ல மாட்டாரா? அப்படி என்று நினைத்துக் கொண்டு... அந்தப் பழைய கேள்வியையே திரும்பவும் கேட்டார்கள்.

“சுவாமி! இப்பொழுதாவது சொல்லுங்களேன். நீங்க அடிக்கடி திருடிவிட்டு ஏன் சிறைக்குப் போனீர்கள்... அந்த செயலுக்கு என்ன காரணம்? அதில் உள்ள மர்மம் என்ன?” என்று கேட்டார்கள்.

“அதில் பெரிய இரகசியம் ஒன்றும் இல்லை... சாதாரண விடயம் தான்” என்றார் குரு.

இவர்களுக்கு இன்னமும் ஆச்சரியம். ‘என்னது... சாதாரண விடயமா...? ’என்று நினைத்து குழம்பிப் போய் நின்றார்கள்.

இப்போது அந்த குரு சொல்கிறார்.

“வேறு ஒன்றும் இல்லையப்பா... நான் அடிக்கடி சிறைக்குள் போக வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அதனால் தான் திருடினேன். உள்ளே இருப்பவர்களை சந்தித்துப் பேசி... அவர்களுக்கு நல்ல வழிகாட்ட வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அதற்கு இதை விட சிறந்த வழி வேறு எதுவும் எனக்குத் தோன்றவில்லை. அதனால் தான் சின்ன சின்ன திருட்டுக்கள் செய்தேன். என்னுடைய பயம் எல்லாம் என்னவென்றால் ‘எங்கே மாட்டிக் கொள்ளாமல் போயிடுவேனோ?’என்பதுதான். மாட்டிக் கொண்டால் தானே உள்ளே செல்ல முடியும். எனக்குத் தண்டனை கொடுக்கும் நீதிபதியும் ரொம்ப நல்லவர்... ஒவ்வொரு தடவையும் ஆறு மாதத்திற்குக் குறையாமல் தண்டனை கொடுக்கிறார். உள்ளே எனக்கு ஒரே சந்தோசம் தான். நிறையப் பேர் திருந்தி வெளியே வருவதற்கு நான் உதவி செய்திருக்கிறேன்.” என்றார்.

உண்மையான ஞானிக்கு அரண்மனையும் ஒன்று தான் சிறைச்சாலையும் ஒன்று தான் என்பதை தன்னுடைய வாழ்க்கை மூலமாக நிரூபித்துக் காட்டினார் அந்த குரு.

நம்ம ஆள் ஒருத்தர் கொஞ்சம் வித்தியாசமான ஆள் தான். அடிக்கடி திருடுவான் – மாட்டிக்கொள்வான் – சிறைக்குக் போவான். என்னப்பா இப்படி செய்கிறாய் என்று கேட்டால்... “சிறை என்பது எனக்கு மாமனார் வீடு மாதிரி சேர்” என்பான்.

நிஜமாகவாக அப்படி சொல்கிறாய் என்று கேட்டால்... “ஆமாம் சேர்... என்னுடைய மாமனாரும் அங்கே தான் ஆயுள் தண்டனைக் கைதியாய் இருக்கிறார் ”என்றான்.

# நல்லாட்சி அரசாங்கம் எனக்குத்தந்த பரிசு சிறை வாழ்வு மட்டுமே-பிள்ளையான் குமுறல்

(கல்முனை)

நல்லாட்சி அரசாங்கம் தந்த பரிசிற்கு ஐந்து வருடம் பூர்த்தியாகியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

முன்னாள் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை வழக்கில் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர், தான் கைது செய்யப்பட்டு ஐந்தாண்டுகள் ஆகிவிட்டதாகவும் நல்லாட்சி அரசாங்கத்தின் செயற்பாடுகளையும் தனது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

அப்பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

என்னுடைய சிறை வாசத்திற்கு இன்று (11 ஆம் திகதி) ஐந்து வயது. இதுவே நல்லாட்சி எனக்கு தந்த பரிசு. நாங்கள் தான் தமிழ் மக்களது ஏக பிரதிநிதிகள் என்று கூறுபவர்களின் தூண்டுதலுக்கு கிடைத்த வெற்றிக்கேடயம்.



நான் மாகாண சபை உறுப்பினராக இருந்த வேளையில் நயவஞ்சகமாக சிறைக்கு அனுப்பப்பட்டேன்.

இருந்தாலும் மக்கள் என் மேல்நம்பிக்கை வைத்து போலிப் பிரசாரங்களையும் முறியடித்து - தமிழ்ப் பிரதிநிதிகளில் அதி கூடிய (54,198) விருப்பு வாக்குகளை அளித்து பாராளுமன்ற உறுப்பினர் என்ற கௌரவத்தையும் வழங்கினர்.

அன்பான மட்டக்களப்பு மாவட்ட மக்களது கனவுகளை நனவாக்க வேண்டிய பொறுப்பைச் சுமந்தவனாக, விரைவில் நயவஞ்சக வலை விலக்கப்பட்டு, எம் மக்களுக்கு பணி செய்யக் கூடிய சூழ்நிலை உருவாகும் என்ற நம்பிக்கையுடன் எனது அரசியல் பயணம் தொடர்கிறது.

எல்லாவற்றையும் தலைமையேற்று நடத்தி விட்டு "எடுப்பார் கைப்பிள்ளையாக" ஆட்சி செய்து என்னுடைய அம்மாவின் கோரிக்கை கடிதத்தையும் உதாசீனம் செய்தார் முன்னாள் ஜனாதிபதி என அவர் பதிவிட்டுள்ளார். (நி-7)


# சம்பிக்கவிற்கு எதிரான வழக்கு டிசெம்பரில் விசாரணை

(கொழும்பு)

ராஜகிரிய பகுதியில் முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க பயணித்த வாகனம் விபத்திற்குள்ளான சம்பவம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட 3 பேருக்கு எதிரான வழக்கை டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. (நி-7)



# பல்கலைக்கழக மாணவிக்கு கொரோனாத் தொற்று உறுதி



(மாத்தறை)

மாத்தறை வெல்லமடம பகுதியில் அமைந்துள்ள ருஹுணு பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர் ஒருவரின் தந்தைக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக செய்தித் தொடர்பாளர் இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து குறித்த மாணவனும் அவருடன் தனியார் விடுதியொன்றில் தங்கியிருந்த மற்றுமொரு மாணவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் இன்று செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்படவுள்ளது.

கடந்த சனிக்கிழமை குறித்த பல்கலைக்கழகத்தில் பயின்று வரும் பாணந்துறையினைச் சேர்ந்த மாணவி ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இந்த நிலையில் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள மாணவியும் இவரும் பல்கலைக்கழக விடுதியில் ஒரே அறையில் தங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஜ-7)

# துண்டுப் பிரசுரம் மூலம் விழிப்புணர்வு நடவடிக்கைகள்



(கொழும்பு)

கொரோனா வைரஸ் தாக்கம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, மக்கள் மத்தியில் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்தும் வகையில் ஹற்றன் நகர் பகுதியில் மக்களுக்கு துண்டுப்பிரசுரம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை திருச்சபை கொழும்பு மறை மாவட்டத்தின் ஏற்பாட்டில் தோட்ட சமூக அபிவிருத்தி பணியகத்தின் ஊடாக நேற்றுத் திங்கட்கிழமை இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் தாக்கத்தில் இருந்து பாதுகாத்து கொள்வது தொடர்பான வழிமுறைகள் அடங்கிய குறித்த துண்டுப் பிரசுரம், ஹற்றன் நகர் பகுதி, அரச தனியார் பேருந்து தரிப்பிடம், டிக்கோயா, பொகவந்தலாவ, மஸ்கெலியா, நோர்வூட் ஆகிய பிரதான நகரங்கள் போன்ற பகுதிகளில் உள்ள மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

# இதுவரை 51 ஆயிரம் பேர் தனிமைப்படுத்தலை நிறைவு செய்தனர்

(கொழும்பு)

முத்தரப்பு படையினரால் பராமரிக்கப்படும் ஒன்பது தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்து தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை வெற்றிகரமாக நிறைவுசெய்த 112 பேர் வெளியேற்றப்படவுள்ளனர்.

இதுவரை 51 ஆயிரத்து 4 நபர்கள் தனிமைப்படுத்தப்பட்ட நடைமுறைகளை முடித்து தனிமைப்படுத்தல் நிலையங்களை விட்டு வெளியேறியுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

தற்போது 93 தனிமைப்படுத்தல் நிலையங்களில் 10 ஆயிரத்து 447 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தலில் உள்ளனர்.

இதற்கிடையில் கட்டார், டோஹாவிலிருந்து வருகை தந்த இருவர் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-7)

# ஹெலா ஆடைத்தொழிற்சாலை ஊழியருக்கும் தொற்று உறுதி

## ஊழியர்கள் தனிமைப்படுத்தலில்

(கொழும்பு)

திஹாரிய பகுதியில் அமைந்துள்ள ஹெலா ஆடைத் தொழிற்சாலையின் ஊழியர் ஒருவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த நிர்வாகத்தினர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே இந்த விடயம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலையின் ஏனைய ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக குறித்த ஆடைத் தொழிற்சாலையின் நிர்வாகம் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதேநேரம், மினுவாங்கொட கொத்தணிப் பரவலுடன் கொரோனாத் தொற்றுக்குள்ளான ஊழியருக்கு ஏதேனும் தொடர்புகள் உள்ளதா? என்பது தொடர்பிலும் ஆராயப்பட்டு வருவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஆடைத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதுடன், ஊழியர்களின் சோதனை முடிவுகள் வெளியானதும் ஆடைத் தொழிற்சாலையை திறப்பது தொடர்பான முடிவுகள் எட்டப்படும் என்றும் நிர்வாகத்தினர் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி-7)

# ஊடரங்கை மீறிய 120 பேர் கைது

(கொழும்பு)

கடந்த 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் ஊரடங்கு விதிமுறைகளை மீறியமைக்காக கைதுசெய்யப்பட்டவர்களின் எணிக்கையானது 120 ஆக உயர்வடைந்துள்ளது.

இதன்போது 37 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தற்போது 18 பொலிஸ் பிரிவுகளில் ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் உள்ளது.

இதேவேளை மேல் மாகாணத்தில் நடத்தப்பட்ட சிறப்பு சோதனை நடவடிக்கையில் மேலும் 230 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 6 மணி முதல் நேற்றுக் காலை 5 மணிவரை இந்த சோதனை நடவடிக்கையானது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இவற்றுள் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டுக்காக 100 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (நி-7)

# மூன்று வைத்தியர்களுக்கு கொரோனா

(கொழும்பு)

கேகாலையில் மூன்று வைத்தியர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.


இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா இந்த விடயத்தனைத் தெரிவித்துள்ளார்.

கேகாலை வைத்தியசாலையின் வைத்தியர்கள் மூவரே இவ்வாறு கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த 6 தினங்களில் மாத்திரம் 24 ஆயிரத்து 878 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனைகளை முன்னெடுத்துள்ளதாகவும் அதனடிப்படையில் நாளொன்றுக்கு சுமார் 5000 பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-7)

# கடல் புறா

## காட்டுப் புறாவும் வீட்டுப் புறாவும்




"தூதுப் புறா சோதனையிலிருந்து சகல போர்த்தந்திரங்களையும் அறிந்திருப்பதால்தான் இவர் புகழ் கடாரம் வரையில் பரவியிருக்கிறது' என்று சொல்லிக் கொண்டாள் அவள். அத்துடன் ஒரு விடயம் ஆச்சரியமாகவுமிருந்தது கடாரத்தின் இளவரசிக்கு. இத்தனை மெல்லிய பறவையின் இறகில் செய்தி ஓலையை எப்படி அடியோடு மறைக்க முடியும்?" என்றும் தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள் அவள்.

குணவர்மன் மனத்தில் ஏதேதோ எண்ணங்கள் எழுந்து அலை மோதிக் கொண்டிருந்தன. "உண்மையில் இது தூதுப் புறாதானா? இல்லை இளைய பல்லவன் இல்லாததைக் கற்பனை செய்கிறானா, தூதுப் புறாவாயிருந்தால் இது எந்தவிதத் தூதைக் கொண்டு வந்திருக்க முடியும்? இதில் ஏதாவது நமக்கு விடிமோட்சமுண்டா?" என்று ஏதேதோ யோசித்துக் கொண்டும் அடிக்கடி புறாவையும் கருணாகர பல்லவனையும் பார்த்துக் கொண்டும் நின்றாள்.

கருணாகர பல்லவன் குணவர்மனையோ அருகே விம்பம் போல் நின்ற காஞ்சனாதேவியையோ ஏறெடுத்தும் பார்க்காமல் தன் சோதனையிலேயே முனைந்தான். புறாவின் ஒரு புறத்து இறக்கைகளை விரல்களால் தடவித் தடவிச் சோதித்த பிறகு மற்றொரு பக்கத்துக்காக அதைத் திருப்பி அந்தப் பகுதிகளையும் சோதித்தான். அந்தப் பகுதியின் இறக்கைகளுக்குள் அவன் விரல்கள் நீண்ட நேரம் துளாவிக் கொண்டிருந்த சமயத்தில் ஏதோ ஒரு இடத்தில் அவன் விரல் பட்டதும் அந்தப் புறா 'கூகூ' என்று திடீரென்று சத்தமிட்டது. அந்த இடத்தில் வைத்த ஆள்காட்டி விரலை அகற்றாமல் விளக்குக்காக நன்றாகப் புறாவை உயரத் தூக்கிய இளைய பல்லவன் வேலிலும் கூரிய தன் விழிகளை இறக்கையின் அந்தப் பகுதியை ஒட்டி இரண்டு விரல்களை இறக்கையின் அந்தப் பகுதியில் புக விட்டு இறக்கையும் உடலும் இணைந்த இடத்திலிருந்து சின்னஞ்சிறு பட்டுத் துணி ஒன்றை வெளியே எடுத்தான்.

அந்தப் பட்டுத் துணியின் பரிமாணத்தைப் பார்த்து காஞ்சனாதேவி மட்டுமல்ல குணவர்மனும் ஆச்சரியத்தின் எல்லையை எய்தினான். தென்னை ஈர்க்கின் கனமும் அரைச் சுண்டு விரல் அகலத்துக்குமாக சுற்றப்பட்டிருந்த அந்தப் பட்டுத்துணி எத்தனை நீளம் இருக்கும், அதில் செய்தியைத் தான் எப்படி எழுத முடியும் என்று நினைத்துப் பார்க்க முடியாது. அந்த ஸ்ரீவிஜய பெருமக்கள் இருவரும் வியப்பு முகங்களில் நன்றாகப் பிரதிபலிக்க கருணாகர பல்லவனை உற்று நோக்கினார்கள். அவர்கள் முகங்களில் படர்ந்த ஆச்சரிய ரேகையை கவனித்த கருணாகர பல்லவன் உதடுகளில் இலேசாக புன்முறுவல் காட்டி உங்களுக்கு இது ஆச்சரியமாகத்தான் இருக்கும். ஆனால் தமிழகத்தில் இருக்கும் எங்களுக்கு அது அதிசயமல்ல என்று கூறி நன்றாக இறுக்கிச் சுருட்டப்பட்டிருந்த அந்தப் பட்டுச் சுருளை தன் விரல்களால் மெல்ல மெல்லப் பிரித்தான். சுருள் பிரியப் பிரியப் அந்தப் பட்டுத்துணி நீண்டது.

கிட்டத்தட்ட ஓர் அடிக்கு மேல் நீண்டு பஞ்சினும் மெல்லிய தாய் காணப்பட்ட அந்தப் பட்டில் செய்தி ஒன்று பொறிக்கப்பட்டதற்கு அடையாளமாக எழுத்துக்கள் சிவப்பாகத் தெரிந்தன. வெண்பட்டில் சிவப்பாகத் தெரிந்த அந்த எழுத்துக்கள் கலிங்கத்தின் விளக்கொளியில் பெரும் நெருப்புத் துண்டங்களைப் போல் பளபளத்தன.

"ஆச்சரியம் ஆச்சரியம்" என்று வாய்விட்டே சொன்னான் குணவர்மன். அந்தப் பட்டுச் சீலை விரிந்த விந்தையைக் கண்டு.

"உங்களுக்கு இது ஆச்சரியம் தான் குணவர்மரே!" என்றான் இளைய பல்லவன்.

"இத்தனை மெல்லிய பட்டுத் துணி இருக்கக்கூடும் என்று நான் கேள்விப்பட்டது கூட இல்லை" என்றான் குணவர்மன்.

"நீங்கள் கேள்விப்படாதிருக்கலாம். ஆனால் ரோமாபுரியும் மற்ற மேல் நாடுகளும் கேள்விப்பட்டிருக்கின்றன. சீனத்துப் பட்டுக்கு அடுத்தபடியாக எங்கள் மெல்லிய பஞ்சு உடைகளும் பட்டு உடைகளும் தான் ரோம சாம்ராச்சியத்தில் வாங்கப்படுகின்றன. இறக்கைக்குள் அடையக் கூடிய இந்தச் சிறு பட்டுத் துணியைப் பற்றி ஆச்சரியப்பட வேண்டாம். அரசகுமாரி உடுக்கக்கூடிய பெரும் சேலை ஒரு கைக்குள் அடங்கும்படியான ஆடைகளையும் எங்கள் நெசவாளர்கள் தயாரிக்கிறார்கள்"

"அப்படியா!" என்று வினாவினாள் காஞ்சனாதேவி.

"ஆம் அரசகுமாரி! ஒருவேளை இந்தக் கலிங்கத்தில் இருந்து நாம் தப்பி சோழநாடு சென்றால் அத்தகைய பட்டாடை ஒன்று இந்த அடிமையின் பரிசாக தங்களுக்கு அளிக்கப்படும்" என்று பதில் சொன்ன கருணாகர பல்லவன்.

"அதிருக்கட்டும் அரசகுமாரி, இந்தச் செய்தியை முதலில் படிப்போம். விளக்கை இன்னும் சற்று அருகில் காட்டுங்கள்" என்று கூறவே அரசகுமாரி விளக்கை அவனருகில் காட்டினாள்.

மெள்ள மெள்ள விரித்துப் பிடித்த அந்தச் சின்னஞ்சிறு பட்டுத் துணியில் காணப்பட்டவை நாலைந்து வரிகளென்றாலும், அவற்றில் அவர்கள் விமோசனத்துக்கான செய்தியே விரிந்து கிடந்தது. அந்த நாலைந்து வரிகளைப் படித்துக்கொண்டே போன இளையபல்லவனின் முகம் திடீரெனப் புத்தொளி பெற்றது. அவன் கண்களில் எல்லையற்ற மகிழ்ச்சி தாண்டவம் ஆடியது. "நினைத்தேன்! நினைத்தேன் அப்பொழுதே!" என்று இரைந்து கூவிக் கொண்டு திடீரென்று மஞ்சத்தை விட்டு எழுந்தான் கருணாகர பல்லவன்.

அவன் மகிழ்ச்சிக்கும் பேச்சுக்கும் காரணம் புரிந்து கொள்ளமுடியாத தந்தையும் மகளும் ஒருவரையொருவர் சில விநாடிகள் பார்த்துக் கொண்டனர். கடைசியில் குணவர்மனே கேட்டான்: "என்ன நினைத்தீர்கள் இளைய பல்லவரே?" என்று.

"புலியைச் சிறையிலடைப்பது கஷ்டமென்று."

"எந்தப் புலியை?"

"இந்தப் புலியைத்தான்" என்று குணவர்மனிடம் அந்தப் பட்டுத்துணியை நீட்டினான் இளைய பல்லவன். அந்தப் பட்டுத் துணிமீது ஏககாலத்தில் கண்களை ஓட்டிய குணவர்மனின் முகத்திலும், காஞ்சனாதேவியின் முகத்திலும் பிரமிப்பு மட்டுமன்றி ஏதோ புதையலைத் திடீரென்று பிடித்துவிட்டது போன்ற நம்பிக்கையொளியும் சுடர் விட்டது.

"கடாரத்தின் மன்னருக்குப் பயம் வேண்டாம். மூன்று நாட்கள் அங்கேயே இருங்கள். பல காரியங்கள் நடக்கும். இடையூறு செய்ய வேண்டாம் அநபாயன்" என்று கண்டிருந்தது.

அந்த ஓலையைத் திரும்பத் திரும்பத் படித்த குணவர்மன், "இளைய பல்லவரே! இந்தக் கையெழுத்து அநபாயரதுதானா?" என்று சந்தேகத்துடன் வினவினான்.

"ஆம், அவருடையதுதான்"

"அப்படியானால் அவர் தப்பியிருக்க வேண்டும்"

"தப்பித்தான் இருக்க வேண்டும்"

"கலிங்கத்தின் சிறையிலிருந்து தப்புவது அவ்வளவு எளிதா?"

"எளிதல்ல குணவர்மா! ஆனால் அநபாயரின் திறமை எல்லையற்றது. அவரை எந்த இடத்திலும் அடைத்து வைப்பது கஷ்டம்."

"ஏதோ எனக்கும் அதிர்ஷ்டமிருப்பதாகத் தெரிகிறது இளைய பல்லவரே. எப்படியாவது அநபாயர் வந்து நம்மை விடுவித்து சோழநாடு அழைத்துச் சென்றால் நான் வந்த காரியம் கைகூடும்" என்று கூறி ஆயாசம் தீர்ந்ததற்கு அறிகுறியாகப் பெருமூச்சு விட்டான் குணவர்மன்.

"முதலில் இங்கிருந்து தப்பும் மார்க்கத்தைப் பார்ப்போம் குணவர்மரே! இப்பொழுது நாம் செய்ய வேண்டியதெல்லாம் மூன்று நாள்கள் காத்திருப்பதுதான்" என்று விளக்கினான் கருணாகர பல்லவன். (தொடரும்...)

# கொரோனாத்தொற்று பரவலுக்கு மத்தியில் இலங்கைக்கு பயணம் செய்துள்ள சீனக் குழு

சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் வலுப்பெற்றிருந்ததுடன், அது கடந்த மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக் காலத்தில் சற்று வலுவிழந்திருந்தது.

அதன்பின்னர், மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் பாதுகாப்பு செயலாளராக கடமையாற்றிய அவரது சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷ கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு மாபெரும் வெற்றி பெற்றார்.

கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்ததன் பின்னர், சீனாவுடனான உறவு மீண்டும் வலுப் பெறும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் தனது முதலாவது உத்தியோகபூர்வ பயணமாக இந்தியாவிற்கான பயணமாக கோட்டாபய ராஜபக்ஷ மேற்கொண்டிருந்தார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 29 மற்றும் 30 ஆகிய திகதிகளில் அவர் இந்தியாவிற்கு பயணம் மேற்கொண்டார்.

இந்தியாவிற்கான பயணத்தை அடுத்து, கோட்டாபய ராஜபக்ஷ சீனாவிற்கான பயணத்தை இந்த ஆண்டு ஜனவரி மாதம் மேற்கொள்ள நடவடிக்கைகள் அனைத்தும் பூர்த்தியாகியிருந்த பின்னணியில், அந்த பயணம் இரத்து செய்யப் பட்டது.



சீனாவில் பரவிய கொரோனாத் தொற்றின் காரணமாக கோட்டாபய ராஜபக்ஷவின் சீனாவிற்கான பயணம் இரத்துச் செய்யப்பட்டது.

இந்த நிலையில், சர்வதேச மட்டத்திலான உறவுகளும் பாதிக்கப்பட்டிருந்ததுடன், சீனாவுடன் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு உத்தியோகபூர்வ கலந்துரையாடல்களைக் கூட முன்னெடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டது.

தனிமைப்படுத்தல் சட்டம், சுகாதார நடைமுறைகள் காரணமாக அனைத்து விதமான வெளிநாட்டுப் பயணங்களும் இரத்துச் செய்யப்பட்டிருந்தன.

இவ்வாறான பின்னணியில், இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இலங்கை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு இடையில் கடந்த இரு வாரத்திற்கு முன்னர் காணொளி ஊடாக கலந்துரையாடலொன்று நடத்தப்பட்டது.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்தும் வகையில் இந்தக் கலந்துரையாடல் அமைந்திருந்ததுடன், இந்தியாவினால் பல்வேறு உதவித் திட்டங்களும் இந்த கலந்துரையாடலின் ஊடாக இலங்கைக்கு கிடைக்கப் பெற்றன.

இவ்வாறான பின்னணியில், இலங்கையில் மூன்றாவது கொவிட் கொத்தணி அச்சுறுத்தல் நிலவிவரும் இந்த சந்தர்ப்பத்தில், சீன உயர்மட்ட தூதுக் குழுவை இலங்கைக்கு பிரவேசிக்க அண்மையில் இலங்கை அரசாங் கம் அனுமதி வழங்கியது.

சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழுவின் அரசியல் விவகார உறுப்பினரும், கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழு வெளிவிவகார அலுவலகத்தின் பணிப்பாளருமான யாங் ஜீச்சி தலைமையிலான 26 உறுப்பினர்களைக் கொண்ட குழுவே இலங்கைக்கு அவசரமாக பயணத்தை மேற்கொண்டிருந்தது.

இவ்வாறு இலங்கைக்கு வருகை தந்த சீனக் குழு, கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் நாட்டிற்குள் எவ்வாறு அனுமதிக்கப்படுகின்றது என எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் சுகாதார அமைச்சரிடம் கேள்வி எழுப்பியிருந்தன.

நாட்டிற்கு வருகை தரும் தூதுக்குழு உறுப்பினர்களுக்கு விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனைகள் மாத்திரம் நடத்தப்பட்டு, நாட்டிற்குள் அனுமதிக்கப்படுவார்கள் என சுகாதார அமைச்சர் பதிலளித்திருந்தார்.

தனிமைப்படுத்தல் சட்டம் உள்ளிட்ட சுகாதார நடைமுறைகள் சீன தூதுக்குழுவிற்கு அமுல்படுத்தப்படாமை தொடர்பில் எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பியிருந்த பின்னணியில் அவர்கள் நாட்டிற்குள் வருகை தந்திருந்தனர்.

இலங்கைக்கு பயணம் மேற்கொண்ட சீனத் தூதுக்குழு, ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட தரப்பினரை நேற்று சந்தித்து இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்தியிருந்தனர்.

## ஜனாதிபதியுடனான சந்திப்பு



ஆசியாவின் 4 நாடுகளுக்கான தமது பயணத்தில், முன்னுரிமை வழங்கி, இலங்கைக்கே முதற்தடவையாக வருகை தந்ததாக சீனத் தூதுக்குழு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளது.

இலங்கையுடனான இருதரப்பு பேச்சுவார்த்தைக்கு முன்னுரிமை வழங்குமாறு, சீன ஜனாதிபதி கூறியிருந்ததாகவும் ஜனாதிபதியிடம், சீனத் தூதுக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதன்போது கருத்து வெளியிட்ட கோட்டாபய ராஜபக்ஷ, யுத்தத்தை நிறைவுக்கு கொண்டு வர பாரிய உதவிகளை சீனா வழங்கியிருந்ததாகவும், யுத்தத்தின் பின்னரான காலப் பகுதியில் நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு சீனா பாரிய உதவிகளை வழங்கியிருந்ததாகவும் கூறியுள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகம், கொழும்பு துறைமுக நகரம், தெற்கு அதிவேக வீதி உள்ளிட்ட அபிவிருத்தித் திட்டங்களை ஜனாதிபதி நினைவூட்டியுள்ளார்.

இலங்கையின் உள்நாட்டு உற்பத்திகளை சீனா கொள்வனவு செய்ய வேண்டும் என ஜனாதிபதி இதன்போது கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், சீன சுற்றுலாப் பயணிகளை நாட்டிற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கோரியுள்ளார்.

அதன்பின்னர் கருத்து வெளியிட்ட சீன தூதுக்குழு, இலங்கை மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை குறித்த பேச்சுவார்த்தையை மீள ஆரம்பித்தல் மற்றும் உத்தேச அம்பந்தோட்டை தொழில்பேட்டை திட்டத்தை விரைவில் நிறைவு செய்வதற்கு திட்டமிட்டுள்ளதாக கூறியுள்ளனர்.

கொவிட் தொற்று முழுமையாக கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டதன் பின்னர் சீனாவிற்கான விஜயத்தை மேற்கொள்ளுமாறு தூதுக்குழு, ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டுள்ளது

அத்துடன், ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை உள்ளிட்ட சர்வதேச விடயங்களில் இலங்கைக்கு சார்பாகவே சீனா செயற்படும் எனவும் சீன உயர்மட்ட தூதுக்குழு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் உறுதியளித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிடுகின்றது.

## பிரதமருடனான சந்திப்பு

உலகளாவிய ரீதியில் கொரோனாத் தொற்று பரவிவரும் நிலையில், சீனாவின் உயர்மட்ட தூதுக்குழுவொன்று, தெற்காசியாவிற்கான விஜயத்தை மேற்கொள்ளும் முதலாவது சந்தர்ப்பம் இதுவென பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம், சீன உயர்மட்ட தூதுக்குழு தெரிவித்துள்ளது.

தெற்காசியாவில் இலங்கைக்கு முதலாவதாக விஜயம் செய்வதன் ஊடாக இரு தரப்பு உறவுகளை மேம்படுத்திக் கொள்ள முடியும் என எதிர்பார்ப்பதாகவும் அந்த குழுவினர் கூறியுள்ளனர்.


இலங்கைக்கான முதலீட்டு நடவடிக்கைகளை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்குமாறும், முதலீட்டாளர்களை இலங்கைக்கு அனுப்பி வைக்குமாறும் பிரதமர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், இலங்கையின் ஏற்றுமதி வருவாயை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அவர் கூறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதையடுத்து கருத்து வெளியிட்ட சீன உயர்மட்ட குழுவின் தலைவர் யாங் ஜீச்சி, வெளிநாட்டு முதலீடுகளை மேற்கொள்ளும் போது, சீன அரசாங்கம் இலங்கைக்கு முன்னுரிமை வழங்கும் எனக் கூறியுள்ளார்.

இலங்கை கொவிட் தொற்றில் பாதிக்கப்பட்டுள்ள நிலையிலும், சீனாவிற்கு ஆதரவானவர்கள் எனக் கூறப்படும் மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தினர் ஆட்சிக்கு வந்துள்ள நிலையிலும், சீனாவின் உயர்மட்ட தூதுக்குழுவொன்று இலங்கைக்கு சுகாதார நடைமுறைகளை தளர்த்தி வருகை தந்தமை இலங்கை - சீனாவிற்கு இடையிலான உறவை மேலும் வலுப்படுத்துவதாக அமையும் என நிபுணர்கள் கூறுகின்றனர்.

B.B.C



# ரியாஜ் பதியுதீன் விடுதலை தொடர்பில் நான் கூறிய கருத்துகள் திரிவுபட்டே வெளிப்பட்டது

## ஏரான்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீனின் சகோதரர் விடுதலை செய்யப்பட்டமை தொடர்பில் தான்கூறிய கருத்தை ஊடகங்கள் திரிபுபடுத்தி காண்பித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீனின் சகோதரரான ரியாஜ் பதியுதீனின் விடுதலை தொடர்பில் நான் கூறியதாக கூறப்படும் கருத்து திரிபுபடுத்தப்பட்டே ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ளன.

பொதுவாகவே நாங்கள் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றோம். உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல்களின் போது கத்தோலிக்க மக்களை போன்று பௌத்த, இந்து மக்களும் உயிரிழந்துள்ளனர்.

அதேபோன்று நான் தனிப்பட்ட வகையில் அறிந்திருந்த, வங்கியில் பணிபுரிந்து வந்த ஒருவரின் மனைவியும் மகளும் இந்த தாக்குதல் சம்பவத்தின் போது உயிரிழந்தனர்.

இந்நிலையில் முன்னாள் அமைச்சர் பதியுதீன் மற்றும் அவரது சகோதரர் தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது. அவர்கள் தொடர்பான இரகசிய தகவல்களை அறிந்திருப்பதற்கு நான் இரகசிய பொலிஸ் பிரிவில் கடமை புரியவில்லை.

ஆனால், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடைய அரச அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் கைது செய்யப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலே நாங்கள் இருக்கின்றோம்.



இதேவேளை, ஏதாவது ஒரு குற்றச்செயற்பாடு தொடர்பில் ஒருவர் மீது குற்றம் சுமத்தப்பட்டு, அது நிரூபிக்கப்படாவிட்டால் அவரை விடுதலை செய்வதில் தவறில்லை.

அதேவேளை குறித்த நபரினால் சம்பந்தப்பட்ட வழக்கு விசாரணைகளுக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்பில்லை என்று நீதிமன்றம் எண்ணினால், அவரை பிணையின் அடிப்படையிலோ, அல்லது வேறு எந்த நிபந்தனையின் அடிப்படையிலோ விடுதலை செய்வதற்கு நீதிமன்றத்திற்கு உரிமையுள்ளது. அதனை தான் நான் கூறினேன் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-7)

# போதைப்பொருள் தடுப்புப்பிரிவின் அதிகாரிகளின் விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

போதைப்பொருள் மோசடியுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் 13 பேரின் விளக்கமறியல் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் சட்டவிரோதமாக தொடர்புகளைப் பேணிய குற்றச்சாட்டில் குறித்த 13 பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், வழக்கு விசாரணைகளின் போது குறித்த 13 பேரும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த வழக்கு விசாரணை நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பான அறிக்கையொன்று, குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலையான, பிரதி சொலிசிட்டர் நாயகம் திலீப பீரிஸினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து, பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் 13 பேரின் விளக்கமறியல் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை நீடிக்கப்படுவதாக, நீதவான் பணிப்புரை விடுத்தார்.

அத்துடன், குறித்த தினத்தில் விசாரணை நடவடிக்கைகள் குறித்த அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2141

### சம்பத்




### செல்வி




### ஸ்ரீ கிருஸ்ணா




### நந்தினி




### மோகனா




### கிருத்திகா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நோயாளிகளை பார்வையிடுவதை தவிர்க்கவும்

## விசேட வைத்திய நிபுணர் அறிவுறுத்தல்

“ (கொழும்பு)


அநாவசியமாக நோயாளிகளைப் பார்வையிடுவதை தவிர்க்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார். ”

நோயாளிகளை பார்வையிட செல்வோர், தமது உடல் நிலை தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டியது கட்டாயமென வும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், அத்தியாவசியம் காணப்பட்டால் மாத்திரம் வைத்தியசாலைகளுக்கு செல்லுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (நி-7)



# ஆன்மீகம்

## இயங்கிக் கொண்டே இருப்பதே இனிய வாழ்க்கை!



‘மரணம் என்பது என்ன?’ தத்துவப் பேராசிரியர்களிடம் இந்த வினாவைக் கேட்டால், அவர்களால்கூட நாம் புரிந்து கொள்ளும் வண்ணம் தெளிவாக விளக்கிவிட முடியாது. ஆனால், இதே கேள்வியை ஒரு மாணவன் கேட்டான். யாரிடம் தெரியுமா? மறைந்த நம் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாமிடம். அனைவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் ஒரு புதிய கோணத்தில் பதில் தந்தார் கலாம்: “மூச்சு நின்று விடுவதல்ல மரணம். முயற்சி நின்று விடுவதே மரணம்.” ஆம். தொடர்ந்து தொய்வின்றி இயங்கிக் கொண்டே இருப்பவனைத்தானே உலகில் இருப்பவனாக நாம் கருத முடியும்? அவன் தானே உண்மையில் வாழ்பவன்? இயக்கமே இல்லாமல் சிலை போல ஒருவன் இருந்தால் அவனைச் செத்தவன் பட்டியலில்தானே சேர்க்க வேண்டும்! அவரவர் ஏற்றுக்கொண்ட தொழிலில், கடமையில், இறுதிவரை இயங்கிக் கொண்டே இருக்க வேண்டும் என்பதைத் திருவள்ளுவர், ‘உலைவின்றித் தாழாது உஞற்றுபவர்’, ‘சாந்துணையும்’ என்ற சொற்களால் விளக்குகிறார்.


ஓடிக் கொண்டே இருக்கும் ஆறும், வீசிக் கொண்டே இருக்கும் காற்றும், சுழன்று கொண்டே இருக்கும் பூமிப் பந்தும் மனிதனுக்குச் சொல்லிக் கொடுக்கும் பாடமே, ‘இயங்கிக் கொண்டே இரு’ என்பதைத்தான். ‘நடக்க நடக்க நாடே நட்பு. படுக்கப் படுக்க பாயும் பகை’ என்ற முதுமொழியை நாம் அறிவோம். ‘ஓரளவு சம்பாதித்து விட்டோம். இது போதும். இனி உட்கார்ந்து சாப்பிடலாம்’ என்ற எண்ணம் பலருக்குள் எழுகிறது. திறமையும் வலிமையும் உடைய ஒருவன் அதிக சுகத்திற்கும் சோம்பேறித் தனத்திற்கும் ஆசைப்பட்டு அமர்ந்து விட்டால் சில மாதங்கள் கழித்து அவனையே அவனுக்குப் பிடிக்காது. வெறுப்பும் விரக்தியும் உடற்பிணியும் அவனை ஆட்கொண்டுவிடும். நித்தம் நடையும் நடைப் பழக்கம் என்கிறாள் ஔவை மூதாட்டி. பல மாதங்கள் ‘ஷெட்’ டிலேயே வைத்த காரை ஓட்டிப் பாருங்கள். உடனே இயங்காது. ‘கொர்... கொர்’... என்று சத்தம் வரும்.

இஞ்சின் கெட்டுப் போயிருக்கும். நம்மை நாமே துருப்பிடிக்க விடலாமா? நாரதர் ‘நாராயணா’ ‘நாராயணா’ என்று உச்சரித்த வண்ணம் ஒரு நாள் பெருமாளை வைகுந்தத்தில் சென்று சேவித்து வழிபட்டாராம். ‘என் பரிபாலனத்தில் பூலோகம் எப்படி இருக்கிறது, நாரதா?’ எனக் கேட்டார் திருமால். ‘ஜம் ஜம் என்று இருக்கிறது பூலோகம். ஒரே லஞ்சம், வஞ்சம்.’ என்றார்’நாரதர். சலித்துக் கொண்ட பெருமாள் ‘நான் சங்கெடுத்து ஊதினால்தானே மழை பொழியும்? இனி மூன்று வருடம் என் சங்கின் முழக்கத்தை முடக்கி வைக்கப் போகிறேன். மழையில்லாமல் மூன்று வருடங்கள் தவித்தால்தான் ஜனங்கள் திருந்துவார்கள்’ என்றார். ‘பிரபோ, பூலோகத்தினருக்கு இது சரியான தண்டனைதான்’ என்று சொல்லிய வண்ணம் வைகுந்தத்தினின்று கீழிறங்கி பூமி வந்தடைந்தார் நாரதர்.

‘மகாவிஷ்ணு மூன்று வருடங்கள் சங்கெடுத்து ஊதப் போவதில்லை. எனவே பூமியில் இனி மூன்று வருடங்களுக்கு மழையே வரப்போவதில்லை. உழவர்கள் எல்லாம் உறங்கப் போகலாம்.’ நாரதரின் அறிவிப்பைக் கேட்ட அனைவரும் அதிர்ந்தனர். வீட்டுக்குள்ளேயே முடங்கினர். இரண்டு, மூன்று மாதங்கள் கழிந்தன. (தொடரும்)

# செய்தித்துளிகள்

## வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் மூவர் கைது



(புத்தளம்)

புத்தளம் களப்பு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தளம் பொலிஸ் போதை ஒழிப்புப் பிரிவினருக்குக் கிடைக்கெப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

புத்தளம் களப்பு பகுதியில் நேற்று முன்தினம் மாலை புத்தளத்தைச் சேர்ந்த இருவரினால் இன்னுமொருவருக்கு விற்பனை செய்ய முற்பட்ட போதே குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாக புத்தளம் பொலிஸ் போதை ஒழிப்புப் பிரிவினர் தெரிவித்ததுடன். சொகுசு கார் ஒன்றும் கைப்பற்றப் பட்டுள்ளதாக மேலும் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 600 சிகரெட்டுகள் அடங்கிய 60 பண்டல்கள் கைப்பற்றப்பட்டுள்ளது. குறித்த சிகரெட் 8 இலட்சம் ரூபாவிற்கு அதிக பெறுமதியென அவர்கள் தெரிவித்தனர். (நி-7)

## ரயிலில் மோதி ஒருவர் பலி

(வெலிக்கந்தை)

அஹுன்கல்ல - வெலிக்கந்தை பகுதியில் ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. அஹுன்கல்ல - வெலிக்கந்தை கடற்கரையோர ரயில் கடவையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பலப்பிட்டிய - பிரஹிமனவத்த பகுதியைச் சேர்ந்த சில்வா எனும் 49 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மாத்தறையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயிலில் மோதியே அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அஹுன்கல்ல பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 120 | 90 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 150 | 180 | 160 | 200 |
| தக்காளி | 180 | 150 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 100 | 80 |
| கோவா | 100 | 140 | 130 | 120 |
| கரட் | 80 | 150 | 180 | 160 |
| பூசணி | 80 | 60 | 70 | 80 |
| புடோல் | 60 | 120 | 80 | 100 |
| வாழைக்காய் | 60 | 80 | 70 | 100 |
| சின்ன வெங்காயம் | 200 | 260 | 200-240 | 260 |
| பெரிய வெங்காயம் | 160 | 220 | 240 | 240 |
| பாகற்காய் | 150 | 250 | 220 | 280 |
| வெண்டிக்காய் | 90 | 90 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 100 | 100 |
| பயற்றங்காய் | 120 | 120 | 70 | 120 |
| லீக்ஸ் | 80 | 100 | 90 | 100 |
| பீற்றூட் | 80 | 100 | 100 | 100 |
| கறிமிளகாய் | 140 | 280 | 220 | 300 |
| முருங்கைக்காய் | 250 | 150 | 100 | 80 |
| போஞ்சி | 200 | 280 | 200-240 | 280 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | 90 | 100 |
| கீரை - 1 பிடி | 40 | 40 | 60 | 40 |
| தேசிக்காய் | 140 | 80 | 160 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 75 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 300 | -- | 300 |
| வெங்காயப்பூ | 200 | 280 | -- | 280 |
| முள்ளங்கி | 60 | 80 | 70 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 40 |
| வல்லாரை | 15 | 40 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | -- | -- | -- |

**வாசிப்பு மாதம் ஒக்டோபர்-2020**

### உதவி செய்

துன்பப் படுவோர்
தனைக் கண்டால்
துணிந்தே உதவப்
புறப்படு நீ

அன்புத் தெய்வம்
நமைக் காக்கும்
அறிந்த உண்மை
மறக்காதே

இரக்கம் என்னும்
பழக்கத்தால்
இனிய நட்பும்
உருவாகும்

நெருக்கம் இறுக்கம்
ஆகிவிட்டால்
நினைத்த காரியம்
செயலாகும்

சொல்லா மொழியும்
இரக்கமெனச்
சுருதியும் சேர்க்கும்
சுகமாக

எல்லா உயிரும்
ஒன்றென்னும்
எண்ணம் கொள்வது
தான் அருமை

தொகுப்பு:
புத்தூர் பொது
நூல் நிலையம்



# சிறுவர் அரங்கம்

## முல்லாவின் புத்திசாலித்தனம்



சில காலம் முல்லா ஒரு பெரிய செல்வந்தனிடம் வேலை பார்த்து வந்தார். ஒருநாள் முல்லா தொடர்ந்து மூன்று தடவை கடைத் தெருவுக்குச் சென்று வந்ததை அவருடைய முதலாளி கண்டு அவரைக் கூப்பிட்டு விசாரித்தார்.

"நீங்கள் ஏன் மூன்று தடவை கடைக்குச் சென்று வருகிறீகள் என்று கேட்டார். அதற்கு முல்லா ஒரு தடவை கோதுமை வாங்குவதற்காக, ஒரு தடவை முட்டை வாங்குவதற்காக. ஒரு தடவையாக எண்ணெய் வாங்குவதற்காகச் சென்றேன்" என்றார் முல்லா.

அதைக் கேட்டு முதலாளி இனி கடைக்குச் செல்லுவதற்கு முன்னால் என்னென்ன தேவை என்பதை முன்னதாகவே தீர்மானித்துக் கொண்டு சென்று வாங்கி வருதல் புத்திசாலித்தனம். ஆகவே இனி இந்த மாதிரியான தவறைச் செய்யாதே என்று முல்லாவை எச்சரித்து அனுப்பினார்.

ஒரு தடவை முல்லாவின் முதலாளியான செல்வந்தருக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டு விட்டது. அவர் முல்லாவை அழைத்து உடனே சென்று மருத்துவரை அழைத்து வா என்று உத்தரவிட்டார்.

சற்று நேரங்கழித்து முல்லா வீடு திரும்பிய போது அவருடன் மூன்று மனிதர்கள் வந்திருப்பதைப் பார்த்த முதலாளி, முல்லாவைப் பார்த்து நான் மருத்துவரை மட்டும் தானே அழைத்து வரச் சொன்னேன் என்றார்.

ஒரே தடவை திட்டம் போட்டு எல்லா காரியங்களையும் செய்து விட வேண்டும் என்று நீங்கள் தானே சொன்னீர்களே என்று கேட்டார் முல்லா. ஆமாம், அப்படித்தான் சொன்னேன். அதற்கும் இதற்கும் என்ன தொடர்பு? என்று ஆச்சரியம் தோன்ற கேட்டார் முதலாளி.

"ஐயா, உங்களுக்கு உடல் நலம் சரியாக இல்லை. நோய் முற்றி இறந்து விடுகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். இறுதிப் பிரார்த்தனை செய்வதற்காக மதகுருவை ஒரு தடவை அழைக்கப் போக வேண்டும். பிறகு உங்கள் உடலைச் சமாதியில் வைப்பதற்காக புதைகுழி தோண்டுபவனை அழைக்க ஒரு தடவை போக வேண்டும்.

இவ்வாறு மூன்று தடவை மூன்று காரியங்களுக்காக நடப்பதற்கு பதில் ஒரே நேரத்தில் மூன்று ஆட்களையும் அழைத்து வந்து விட்டேன்" என்றார் முல்லா. முதலாளியின் முகத்தில் ஈயாடவில்லை.

**நீதி: முட்டாள்கள் சொல்வதை சரியாகப் புரிந்து செயற்பட மாட்டார்கள்.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## குடி உயரக் கோன் உயரும்

96



சோழர் கால நாணயங்கள்

**நாணயம்**

ராஜராஜன் காலத்தில் தங்கம், வெள்ளி, செம்பு, பித்தளை ஆகிய உலோகங்களில் தயாரிக்கப்பட்ட நாணயங்கள் தமிழகத்தில் கிடைத்துள்ளன.

சங்ககால சோழ மன்னர்கள் செம்பு, ஈயம் ஆகிய உலோகங்களில் காசுகளை வெளியிட்டார்கள். காசுகள் சதுரம், நீண்ட சதுரம், வட்டம் போன்ற வடிவங்களில் இருந்தன.

இவை கி.மு. 2 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 3 ஆம் நூற்றாண்டு வரை புழக்கத்தில் இருந்த காசுகளாகும்.

சோழமன்னர்களில் உத்தமசோழரின் ஆட்சிக் காலம் முதல் வெளியிடப்பட்ட நாணயங்கள் நமக்குக் கிடைக்கின்றன. பொன், செம்பு, வெள்ளி ஆகிய் உலோகங்களில் நாணயங்கள் தயாரிக்கப்பட்டன.

நாணயத்தின் நடுவே புலியும் அதன் அருகே மீனும் பொறிக்கப்பட்டிருந்தன. நாணயத்தின் விளிம்பில் கிரந்த எழுத்துக்களில் உத்தம சோழர் என்று பொறிக்கப்பட்டிருந்தன. உத்தம சோழர் காலத்தில் இவ்வகை நாணயங்கள் புழக்கத்தில் இருந்தன.

கி.பி. 1070 ஆம் ஆண்டுக்கு முன்பு, சோழ அரசர்கள் மாடை, காசு என்கிற இருவிதத்தில் தங்க நாணயங்களை வெளியிட்டிருக்கிறார்கள். சோழர் நாணயங்களில் புலி, மீன், வில் மூன்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

ராஜராஜன் காலத்து நாணயங்கள் இரண்டு வகை. முன் பக்கத்தில் புலி, இணையக்கயல், வில் ஆகிய மூன்று சின்னங்களும் அதன் கீழே ஸ்ரீராஜராஜசோழ என்று வடமொழி நாகரி எழுத்துக்களும் பொறிக்கப்பட்டிருந்தன.

மற்றொரு வகை நாணயத்தில் ஒரு பக்கம் ஈழ மனிதன் நின்று கொண்டிருப்பது போலவும், மறு பக்கம் அதே மனிதன் அமர்ந்திருப்பது போலவும் இருக்கும்.

இந்த நாணயங்கள் ராஜராஜ சோழனின் கைப்பிடியில் இருந்த இலங்கையில் தயாரிக்கப்பட்டவை. அந்த நாணயம் , பின்னால் தமிழகத்தில் புழக்கத்தில் இருந்திருக்கிறது. ராஜராஜன் காலத்து வெள்ளி நாணயங்கள் ஒரு கழஞ்சு எடையிலும் அரை கழஞ்சு எடையிலும் இருந்திருக்கின்றன.

ராஜராஜனின் எல்லைக் கோடு தமிழகம் தாண்டிச் சென்ற போதும் கூடவே நாணயங்களும் சென்றன. கி.பி. 1000 இல் வேங்கை நாட்டில் சோழ நாணயம் புழக்கத்தில் இருந்தது.

பல்வேறு மன்னர்கள் ஆட்சியின்போது வெளியிடப்பட்ட காசுகள் வழியாக தமிழர் வரலாற்றை அறிந்து கொள்ள முடியும்.

அதேபோலசோழ மன்னர்களால் வெளியிடப்பட்ட காசுகள் அவர்களுடைய வாழ்க்கையையும் வரலாற்றையும் பிரதிபலிக்கின்றன.

எழுத்து பொறிப்புள்ள காசுகள் ராஜராஜன் காலம் முதல் மூன்றாம் குலோத்துங்கன் காலம் வரை புழக்கத்திலிருந்தன.

(தொடரும்)

மன ஒருமைப்பாடுதான் வெற்றியின் இரகசியம் என்பதை அறிந்தவர்களே உண்மையில் புத்திசாலிகள். - புருசோத்தமானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வீட்டுப் படலையை தட்டுகிறது கொரோனா!

பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரிபூரணனை மறந்ததனாலோ அன்றி அறம் பிழைத்ததனாலோ என்னவோ கொரோனாத் தொற்று பார்க்குமிடமெங்கும் பரவிக் கிடக்கிறது.

நீக்கமற நிறைந்திருக்க வேண்டியதை உதறிவிட்டால், தீங்கிழைக்கக்கூடிய தீயவையே எங்கும் குடியிருக்கும். இதுவே உண்மைத் தத்துவம்.

இப்போது எங்கு பார்த்தாலும் கொரோனா என்பதே செய்தி. அதிலும் கொரோனாத் தொற்று உறுதி என்ற தகவல் அதிகரித்துச் செல்வதையும் அவதானிக்க முடிகிறது.

இதே நிலைமையில் நாடு செல்லுமாயின் கொரோனா உறுதி என்பது ஆயிரக்கணக்கைக் கடக்கும் அபாயம் உள்ளது.

கொரோனாவைக் கட்டுப்படுத்துவதில் இலங்கைக்கு உயரிய மதிப்பு இருந்தது. ஆனால் இப்போதிருக்கக்கூடிய சூழ்நிலையில் கொரோனாவோடு வாழப் பழகுங்கள் என்று கூறுமளவுக்கு அரச தரப்பு வந்துவிட்டதென்றே கூறலாம்.

கொரோனாவின் முதலாவது வீச்சு, தேர்தல் காலத்தில் வந்த வகையால் தேர்தலை மையப்படுத்தி கொரோனாக் கட்டுப்பாட்டு வேலைத்திட்டங்கள் வேகப்படுத்தப்பட்டன.

நோக்கம் வேறாக இருந்தாலும் அதனால் கொரோனா கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

இருந்தும் தற்போது கொரோனா வீச்சைக் கட்டுப்படுத்துவதில் ஒரு சலிப்புத்தன்மை காணப்படுவது போன்ற நிலைமையை அவதானிக்க முடிகிறது.

உண்மையில் கொரோனாவைக் கட்டுப்படுத்துகின்ற விடயத்தில் அரச தரப்பு காட்டுகின்ற தீவிரமே ஏனைய அமைப்புக்களை உசார்படுத்தும்.

மாறாக, அரச தரப்பு தளர்வு நிலை கண்டால் அந்தத் தளர்வு நாடு முழுமைக்கும் பாதகத்தை ஏற்படுத்தும்.

எனவே கொரோனாவுடன் வாழப் பழகுதல் என்ற முடிவை இலங்கை அரசாங்கம் எந்தச் சந்தர்ப்பத்திலும் எடுக்கக்கூடாது.

உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகள் அத்தகையதொரு முடிவை எடுப்பதற்கு அந்த நாட்டு மக்களின் கலை, கலாசாரம் மற்றும் பழக்கவழக்கப் பின்னணிகளும் காரணமாக இருக்கின்றன.

ஆனால், இலங்கை போன்ற இல்லறவியல் பண்பாட்டு உயர்வுமிக்க நாடுகள் அவ்வாறான முடிவுகளை எடுப்பது குடும்பக் கட்டுமானங்களிலும் தனிமனித வாழ்வியலிலும் மிகப்பெரும் துன்பியலை ஏற்படுத்திவிடும்.

ஆகையால் கொரோனாவுடன் வாழப் பழகுதல் என்பதை விடுத்து, கொரோனாவை முழுமையாகக் கட்டுப்படுத்துதல் என்ற இலக்குடன் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அதேநேரம் ஒவ்வொருவரின் வீட்டுப் படலையையும் தட்டுகின்ற கொரோனாவை எட்டத் துரத்துவதற்கு நாம் அனைவரும் தயாராகுவது காலத்தின் கட்டாயம்.

### கொரோனா பரவும் அபாயம் காரணமாக

# வெளிநாடுகளிலிருந்து இலங்கையர்களை அழைத்து வரும் நடவடிக்கை ஒத்திவைப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்புவதற்கு காத்திருப்போருக்கு அரசாங்கம் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

கொரோனா நோய்த் தொற்று அபாயம் காரணமாக பல்வேறு நாடுகளிலிருந்து இலங்கை திரும்புவதற்கு பெரும் எண்ணிக்கையிலானவர்கள் காத்திருக்கின்றார்கள்.

இந்த நிலையில் கொரோனா வைரஸ் தொற்று பரவுகை அச்சம் காரணமாக வெளிநாடுகளிலிருந்து இலங்கையர்களை நாட்டுக்கு மீள அழைத்து வரும் நடவடிக்கைகளுக்கான கால அட்டவணை மறுசீரமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகாரச் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொடை கோவிட்-19 கொத்தணி காரணமாக நாட்டின் வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் நிலையங்கள் நிரம்பியிருப்பதாகவும் இதனால் வெளிநாடுகளிலிருந்து இலங்கையர்களை அழைத்து வரும் நடவடிக்கைகளுக்கான கால அட்டவணை தயாரிப்பு பணிகள் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய கொரோனா நிலைமைகளை கருத்திற் கொண்டு இலங்கையர்களை மீள அழைத்து வருவதற்கான விமான பயணங்கள் குறித்த அறிவிப்பு பின்னர் வெளியிடப்படும் என அட்மிரல் ஜயனாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.(ம-3)

# மன்னாரில் முடக்கப்பட்ட பகுதிகள் நேற்று மாலை மீண்டும் திறப்பு

## சவேந்திர சில்வா அறிவிப்பு

(மன்னார்)

மன்னார், பட்டித்தோட்டம் மற்றும் பெரியகடை ஆகிய பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று மாலை விடுவிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

மன்னாரில் கடந்த மூன்று நாட்களில் ஒன்பது பேருக்கு கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டுள்ள நிலையில் குறித்த பகுதிகள் முடக்கப்படுவதாக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்ட நிலையில் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் ஆயர் இல்லத்தில் பணியாற்றிய கட்டடத் தொழிலாளி ஒருவருக்கு கொரோனா தொற்று உள்ளமை அண்மையில் உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவர்களுடன் நெருங்கிப் பழகிய எட்டுப் பேருக்கு கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ம-3,285)

# பொலிஸ் நிலைய சாரதி பணிஇடை நிறுத்தம்

தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு முரணாக செயற்பட்ட மினுவாங்கொட பொலிஸ் நிலைய சாரதி பணிஇடை நிறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

மினுவாங்கொட பொலிஸ் நிலையத்தில் சாரதியாக பணிப்புரிந்து வந்த உத்தியோகத்தர் ஒருவர்தனிமைப்படுத்தல் முகாமிலிருந்து தப்பி வந்து, களுத்துறை நகரத்திற்கு சென்று மது அருந்தி வீதியில் கிடப்பதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பில் அவதானம் செலுத்திய பொலிஸ் தலைமையகம்,பொலிஸ் ஒழுக்காற்று சட்டவிதிகளுக்கமைய அவர் தற்காலிக பணியிடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். (ம-3)

### வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

அன்பிற்கு மொழி கிடையாது. மொழிகள் புரியாத இடத்தில் அன்பினால் அனைத்தையும் சாதிக்கலாம்.

-சத்யசாய்

### கொரோனா அச்சம்

# நீர்கொழும்பு நீதிமன்ற வளாகம் தற்காலிகமாக மூடப்பட்டது

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று நோயை தடுக்கும் நடவடிக்கையாக நீர்கொழும்பு நீதிமன்ற வளாகம் மற்றும் தேசிய வருமான வரி அலுவலகம் என்பவற்றை எதிர்வரும் 16ஆம் திகதி வரை மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் நீர்கொழும்பு நீதிமன்ற வளாகத்தில் உள்ள இரண்டு நீதவான் நீதிமன்றங்கள், இரண்டு மாவட்ட நீதிமன்றங்கள், தொழில் நீதிமன்றம், மேல் நீதிமன்றம், மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் என்பன தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

வழக்கு விசாரணைகளுக்காக நீதிமன்றத்திற்கு வரும் மக்களுக்கு இதனை தெரிவிக்கும் வகையில் நீதிமன்ற வளாகத்தில் அறிவிப்பு சுவரொட்டி ஒட்டப்பட்டுள்ளது.

மீண்டும் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படும் தினமும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை நீர்கொழும்பு தேசிய வருமான வரி அலுவலகத்தையும் தற்காலிகமாக மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-3)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## உண்மையான மகிழ்ச்சி



- உங்கள் தவறுகளைப் பெரும்பேறாக நினையுங்கள். அவை நம்மை அறியாமலே நமக்கு வழிகாட்டும் தெய்வங்கள் என்றால் மிகையில்லை.
- அழுகை பலவீனத்தின் அறிகுறி. அடிமைத்தனத்தின் அறிகுறி. தோல்விகள் இல்லாத வாழ்க்கையால் பயனேதும் இல்லை. போராட்டம் இல்லாத வாழ்க்கை சுவையாக இருக்காது.
- தன்னலத்தை ஒழிப்பதில் தான் உண்மையான மகிழ்ச்சி இருக்கிறது. உன்னைத் தவிர யாராலும் உன்னை மகிழ்விக்க முடியாது.
- கோபப்படும் மனிதனால் அதிக அளவோ அல்லது செய்யும் பணியைச் சிறப்பாகவோ செய்ய முடியாமல்போய் விடும். ஆனால், அமைதியானவனோ சிறப்பாகப் பணியாற்றுவான்.
- மன்னிக்கக் கூடியதும், சமநோக்குடையதும், நிலை தடுமாறாததுமான மனதை எவன் பெற்றிருக்கிறானோ அவனே ஆழ்ந்த அமைதியில் திளைத்திருப்பான்.
- கருணை என்பது சொர்க்கத்தைப் போன்றது. நாம் அனைவரும் கருணையுள்ளவர்களாக மாறி சொர்க்கத்தில் மகிழ்ந்திருப்போம்.

## பிரான்ஸ் பகிரங்க டென்னிஸ்

# 13வது முறையாக சம்பியன் பட்டம் வென்றார் கிளே ஒஃப் த கிங்



கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற பிரான்ஸ் பகிரங்க டென்னிஸ் தொடரின், ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு மகுடத்திற்கான இறுதிப் போட்டியில், 'கிளே ஒஃப் த கிங்' என வர்ணிக்கப்படும் ஸ்பெயினின் ரபேல் நடால் 13ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியில், ஸ்பெயினின் ரபேல் நடாலும், உலகின் முதல்நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச்சும் மோதினர்.

விறுவிறுப்பான இப்போட்டியில், முதல் செட்டை நடால் 6-0 என எளிதாக கைப்பற்றினார்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டிலும் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய நடால், 6-2 என செட்டை இலகுவாக வென்றார்.

முதலிரண்டு செட்டுகளையும் எளிதாக வென்ற நடாலுக்கு மூன்றாவது செட்டில் சவால் காத்திருந்தது.

மூன்றாவது செட்டில் நடாலுக்கு ஜோகோவிச் கடும் நெருக்கடி கொடுத்தார். எனினும் அதனை திறம்பட சமாளித்த நடால், செட்டை 7-5 என போராடிக் கைப்பற்றி சம்பியன் கிண்ணத்தை வென்றார்.

நடாலுக்கு இது 13 ஆவது பிரான்ஸ் பகிரங்க டென்னிஸ் சம்பியன் பட்டமாகும். முன்னதாக 2005, 2006, 2007, 2008, 2010, 2011, 2012, 2013, 2014, 2017, 2018, 2019 ஆம் ஆண்டுகளில் அவர் சம்பியன் பட்டங்களை வென்றுள்ளார்.

அத்துடன் ஆண்கள் டென்னிஸ் உலகில் அதிக கிராண்ட்ஸ்லாம் சம்பியன் பட்டங்களை வென்ற மகத்தான சாதனை நாயகன் ரோஜர் பெடரரின் 20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் என்ற சாதனையையும் நடால் சமன் செய்துள்ளார்.

இதுதவிர ஒரு கிராண்ட்ஸ்லாம் தொடரில் அதிக சம்பியன் பட்டங்களை வென்ற வீரர் என்ற சாதனையும் நடாலையே சேரும்.

உலகின் முதல்நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச், இதுவரை 17 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ள போதும் இதுவரை 2016 ஆம் ஆண்டு மட்டுமே, ஒரேயொரு முறை அவர் பிரான்ஸ் பகிரங்க டென்னிஸ் தொடரில் சம்பியன் பட்டம் வென்றுள்ளார். (ஐ)

# ஐ.பி.எல்.ரியான் பராங்-ராகுல் டிவெட்டியாவின் பொறுப்பான ஆட்டத்தால் ராஜஸ்தான் அணி வெற்றி



ஐ.பி.எல். இருபது-20 தொடரின் 26 ஆவது லீக் போட்டியில், ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

டுபாயில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், சன்ரைசஸ் ஐதராபாத் அணியும், ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற சன்ரைசஸ் ஐதராபாத் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய சன்ரைசஸ் ஐதராபாத் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 158 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணி சார்பாக, டேவிட் வோர்னர் 48 ஓட்டங்களையும், ஜோனி பேயர்ஸ்டொவ் 16 ஓட்டங்களையும், மனிஷ் பாண்டே 54 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

கேன் வில்லியம்சன் ஆட்டமிழக்காது 22 ஓட்டங்களையும், பிரியம் கார்க் 15 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் பந்துவீச்சில், ஜெய்தேவ் உனட்கட், கார்திக் டியாகி மற்றும் ஜொப்ரா ஆர்செர் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை சாய்த்தனர்.

இதனைத்தொடர்ந்து 159 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி, 19.5 ஓவர்கள் நிறைவில் வெற்றி இலக்கை கடந்து 5 விக்கெட்டுகளால் வெற்றியை பதிவு செய்தது.

இதில் அணியின் சார்பாக, பென் ஸ்டோக்ஸ் 5 ஓட்டங்களையும், ஜோஸ் பட்லர் 16 ஓட்டங்களையும், ஸ்டீவ் ஸ்மித் 5 ஓட்டங்களையும், சஞ்சு சம்சான் 26 ஓட்டங்களையும் ரொபின் உத்தப்பா 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

ரியான் பராங் 42 ஓட்டங்களுடனும் ராகுல் டிவெட்டியா 45 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இறுதிவரை இருந்து அணியினை வெற்றி பெற செய்தனர்.

சன்ரைசஸ் ஐதராபாத் அணியின் பந்துவீச்சில் காலீல் அஹமட் மற்றும் ரஷித் கான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 28 பந்துகளில் 2 சிக்ஸர்கள் 4 பவுண்ரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 45 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட ராகுல் டிவெட்டியா தெரிவு செய்யப்பட்டார். (ஐ)

# டி காக்,சூர்யகுமார் அதிரடியில் டில்லியை வீழ்த்தியது மும்பை



டி காக் மற்றும் சூர்யகுமார் யாதவ் ஆகியோரின் அதிரடியால் டில்லி கேப்பிட்டல்ஸ் அணியை 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது மும்பை இந்தியன்ஸ் அணி. மும்பை இந்தியன்ஸ் - டில்லி கேப்பிட்டல்ஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் அபுதாபியில் நடைபெற்றது.

டாஸ் வென்ற டில்லி அணி பட்டிங் தேர்வு செய்தது. பிரித்வி ஷா 4 ரன்னிலும், ரகானே 15 ரன்னிலும் அவுட்டாகினர். 3 ஆவது விக்கெட்டுக்கு தவான் உடன் ஸ்ரேயஸ் அய்யர் ஜோடி சேர்ந்தார்.

இந்த ஜோடி ரன் விகிதத்தை கூட்டியது. ஸ்ரேயஸ் அய்யர் 42 ரன் எடுத்து ஆட்டமிழந்தார். ஸ்டாய்னிஸ் 13 ரன்னில் ஆட்டமிழந்தார். தவான் கடைசி வரை ஆட்டமிழக்காமல் 52 பந்தில் 69 ரன்கள் அடிக்க டில்லி கேப்பிட்டல்ஸ் 4 விக்கெட் இழப்பிற்கு 162 ரன்கள் எடுத்துள்ளது.

163 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மும்பை அணி களமிறங்கியது. ரோஹித் சர்மா 5 ரன்னில் அவுட்டாகி அதிர்ச்சி அளித்தார். டி காக்கும், சூர்யகுமார் யாதவும் அதிரடியாக ஆடினர். இருவரும் அரை சதமடித்து அசத்தினர். இருவரும் 53 ரன்களில் வெளியேறினர்.

இறுதியில் மும்பை அணி 5 விக்கெட்டுக்கு 166 ரன் எடுத்து வெற்றி பெற்றது. குருணால் பாண்ட்யா 12 ரன்னும், பொல்லார்டு 11 ரன்னும் எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளனர். இந்த வெற்றி மூலம் மும்பை அணி புள்ளிப் பட்டியலில் முதலிடம் பிடித்தது. (ஐ)

## 28 நாட்கள் வரை...

தொடர்ந்தும் உயிருடன் இருக்கும் என புதிய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த கொரோனா வைரஸ் உயிர் வாழும் காலம் என ஏற்கெனவே கணிக்கப்பட்டுள்ள காலத்தை விட அதிகம் என அவுஸ்திரேலிய தேசிய விஞ்ஞான முகவர் அமைப்பின் விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆய்வின் பின்னர் தெரிவித்துள்ளனர்.

இருளான பின்னணியில் பரிசோதனை நடத்தி இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள் ளது. எவ்வாறாயினும் புற ஊதா ஒளிக்கதிர்களால் இந்த வைரஸ் அழியும் எனவும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

உலகம் முழுவதும் பெரும் அச்சுறுத்தலாகவும்சவாலாகவும்மாறியுள்ள கொரோனா வைரஸை ஒழிக்க பல நாடுகள் பல்வேறு விதமான ஆய்வுகளை நடத்தி வருகின்றன.

அத்துடன் இந்த வைரஸை கட்டுப்படுத்தும் மருந்துகளை கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம-3)

## 4 வயது சிறுவன்...

வவுனியா கோவில்குஞ்சுக்குளத்தை பூர்வீகமாக கொண்டு லண்டனில் வசித்து வந்த 4 வயதுச் சிறுவன் ஒருவன் விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுவன் ஐக்கிய இராச்சியத்தின் கேய்ஸ் பகுதியில் தனது பெற்றோருடன் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் தனது தாயுடன் நகர்ப்பகுதிக்குச் சென்ற சிறுவன் பாதசாரி கடவையை கடக்க முற்பட்டபோது வேகமாக வந்த கார் மோதியுள்ளது.

இதனால் படுகாயமடைந்த சிறுவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணமடைந்துள்ளான்.

குறித்த சம்பவத்தில் வவுனியா பால மோட்டை கோவில்குஞ்சுக்குளம் பகுதியை பூர்வீகமாக கொண்ட சசிகரன் அகர்வின் என்ற சிறுவனே மரணமடைந்துள்ளான். (ம-3)

## 116 கிலோ...

தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை கடற்படையினர் நேற்று அதிகாலை கடலில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது மாதகல் கடல் பகுதியில் மர்ம பொதிகள் மிதந்து வருவதை அவதானித்துள்ளனர்.

அவ்வாறு மிதந்து வந்த மர்ம பொருட்களை கடற்படையினர் சோதனையிட்ட போது அதில் இருந்து கேரளா கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கேரள கஞ்சாவினை கடற்படையினர் மீட்டு காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட பொதிகள் 116 கிலோ கிராம் எடையுடைய கேரள கஞ்சா என்று காங்கேசன்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3)

## 6 பேருக்கு...

சாலை ஆய்வுகூடத்தில் நேற்றுத் திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட கொரோனாத் தொற்றுப் பரிசோதனையில் இயக்கச்சியில் தனிமைப்படுத்தலிலுள்ள மினுவாங்கொட பகுதியைச் சேர்ந்த ஆறு பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

வடமாகாணத்தின் பல இடங்களிலிருந்தும் அனுப்பிவைக்கப்பட்ட 320 பேருக்கான மாதிரிகளில் குறித்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் இயக்கச்சி தனிமைப்படுத்தல் முகாமைச் சேர்ந்த ஆறு பேரைத் தவிர ஏனையோருக்குத் தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (ம-3.18)

## கஞ்சா கடத்திய...

3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மின்னேரியா, ஹிங்குரன்கொட, அரலங்வில பகுதிகளிற்கு அவர்கள் கேரள கஞ்சாவை கடத்தியுள்ளனர்.

மின்னேரியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, கடந்த சனிக்கிழமை மின்னேரியா பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 590 கிராம் கஞ்சா, கஞ்சா விற்ற 61,000 ரூபாய் பணம் கைப்பற்றப்பட்டது. அவர்களின் வங்கிக்கணக்குகளில் 402,000 ரூபாய் பணமும் மீட்கப்பட்டது. (ம-3)

## வேலணையில்...

பகுதியில் நேற்று இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் வேலணை கண்ணபுரத்தைச் சேர்ந்த த.பிரதீபன் (வயது-29) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3)

## நாட்டின் பல்வேறு...

இந்தக் காலப் பகுதியில் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இருந்து கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படலாம் என இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார்.

தனியார் தொலைக்காட்சிக்கு நேற்று வழங்கிய செவ்வியிலேயே இராணுவத் தளபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மினுவாங்கொட தொழிற்சாலையில் பணியாற்றிய சில ஊழியர்கள் நாட்டின் பல பிரதேசங்களுக்கு சென்றுள்ளனர். அதன் ஊடாக நாட்டின் பல பகுதிகளில் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட வாய்ப்புகள் உள்ளன.

தற்போது ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் கொரோனா தொற்றாளர்கள் குறைவடைந்துள்ளனர்.

இதன் காரணமாக எதிர்வரும் 2 - 3 நாட்களில் இது தொடர்பில் ஆராய்ந்து, கம்பஹாவின் பொலிஸ் பிரிவில் அமுலிலுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை தளர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## 20ஆவது திருத்...

அமராபுர நிகாயா மற்றும் ராமஞ்ஞா நிகாயா இணைந்த மகா சங்க சபையினர் அரசை வலியுறுத்தியுள்ளனர்.

நேற்றுக் காலை ஊடகவியலாளர் கூட்டத்தை கூட்டி அவர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

19ஆவது திருத்தச் சட்டம் ஜனாதிபதி, பாராளுமன்றம் மற்றும் நீதித்துறை ஆகியவற்றுக்கு இடையே ஒரு சமநிலையை தெளிவாகக் காட்டியது என்றும், முன்மொழியப்பட்ட 20ஆவது திருத்தச் சட்ட வரைவில் ஜனாதிபதியைச் சுற்றி ஒரு சர்வாதிகாரத்தை உருவாக்க முற்படுகிறது என்றும் அவர்கள் கூறினர்.

எனவே, 20ஆவது திருத்த சட்ட வரைவை ஆதரிப்பது தலை துண்டிக்கப்படுவதற்கு ஒப்பாகும் என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த ஊடக வியலாளர் கூட்டத்தில் பங்கேற்ற ராமஞ்ஞா நிகாயா நீதித்துறை சங்கத்தின் தலைவர் பேராசிரியர் அட்டங்கனே ரத்தன பால தேரர், நாட்டில் ஜனநாயகத்தை பாதுகாப்பது பிக்குகளின் பொறுப்பு என்று கூறினார்.

நாட்டில் ஆபத்தான தொற்று நோய் இருக்கும் நேரத்தில் இது போன்ற பலனற்ற அரசியலமைப்பு திருத்தத்தில் கவனம் செலுத்துவது தேவையற்றது என்றும் அவர் சுட்டிக் காட்டுகிறார்.

மேலும் 20 ஆவது அரசியலமைப்பு திருத்தம் மனிதனின் சிந்தனை சுதந்திரம் மற்றும் செயற்பாட்டிற்கு பாரிய இடையூறுகளை ஏற்படுத்தும் என இலங்கை அமரபுர ராமஞ்ஞா சாமக்ரி சங்க சபை, அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

இது வளர்ச்சி அடையாத சமூகத்தை நோக்கி பயணிக்கும் சட்ட ஏற்பாடு என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதால் அதனை நிறைவேற்ற வேண்டாம் என இலங்கை அமரபுர ராமஞ்ஞா சாமக்ரி சங்க சபை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நிறைவேற்றதிகாரம், பாராளுமன்றம் மற்றும் நீதித்துறை என்பன சமநிலையில் பேணப்பட வேண்டும் என்பதே உலகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடாகும் என இலங்கை அமரபுர ராமஞ்ஞா சாமக்ரி சங்க சபை சுட்டிக் காட்டியுள்ளது.

நாட்டின் எதிர்கால பயணத்தில் காணப்படும் தடைகளை நீக்குவதற்காக 19 ஆவது திருத்தத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளதாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், 19ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் நாட்டின் நலன் மற்றும் மக்களின் இறைமை ஆகியவற்றை பாதுகாப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## 92 பேருக்கு...

திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதன்படி, இதுவரை மினுவாங்கொட கோவிட்-19 தொற்று கொத்தணியில் பதிவான மொத்த கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 399ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், இதுவரை நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை நான்காயிரத்து 844ஆகப் ப்திவாகியுள்ளது. (ம-3)

### வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 1621 திகதி 2020/10/12

ஆங்கில எழுத்து Y — வெற்றி இலக்கங்கள் 03 41 72 73

தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 12/10/2020

சீட்டிழுப்பு இலக்கம் 0640

வெற்றி எழுத்து K — சுப்பர் இலக்க 14 — வெற்றி இலக்கங்கள் 07 21 30 64

### கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள் NLB

சீட்டிழுப்பு திகதி 12-10-2020

சீட்டிழுப்பு இலக்கம் 2568

ஆங்கில எழுத்து O — வெற்றி இலக்கங்கள் 22 45 59 73

தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2020/10/12

சீட்டிழுப்பு இலக்கம் 4273

ஆங்கில எழுத்து C — வெல்லப்பட்ட இலக்கங்கள் 9 8 2 2 0 7

தேசிய லொத்தர் சபை

### சுபிரி வாசனா

சீட்டிழுப்பு திகதி 2020 / 10 / 12 — 1543 சீட்டிழுப்பு இலக்கம்

சுப்பர் இலக்கம் 05 — வெற்றி இலக்கங்கள் 24 27 43 44

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

### ராசி அதிர்ஷ்டம்

திகதி 12/10/2020 — வெற்றி வாரம் 2950

சுப்பர் ஜக்பொட் ரூ. 30,65,382 — வர்ணம் மஞ்சள்

வெற்றி இலக்கங்கள் 16 19 20 37 — மகரம்

6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

டபள் சான்ஸ் விசேட இல. — ரூ.500 பரிசுக்குரிய 2567 — ரூ.100 பரிசுக்குரிய 875

அபிவிருத்தி லொத்தர் சபை

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,549,280

### அத கோடிபதி ADA KOTIPATHI

திங்கட்கிழமை

சீட்டிழுப்பு இல: 1069

வர்ணம் : சிவப்பு

சீட்டிழுப்பு திகதி 2020.10.12

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 77,672,175/-

SEASON

வெற்றி இலக்கங்கள் 07 17 53 67 — ஆங்கில எழுத்து W

ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 2367

ரூ. 100/- பரிசுக்கான விசேட இலக்கம் 224

அபிவிருத்தி லொத்தர் சபை

வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிதா Shanida

திங்கட்கிழமை

சீட்டிழுப்பு திகதி: 2020.10.12

சீட்டிழுப்பு இல. : 3399

வர்ணம் : நீலம்

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 30,284,254.20

வெற்றி இலக்கங்கள் 09 12 34 43 — ஆங்கில எழுத்து H

ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 3158

அபிவிருத்தி லொத்தர் சபை

வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ஜயோதா Jayoda

சீட்டிழுப்பு வாரம் 1697 — சீட்டிழுப்பு திகதி 12/10/2020

வெற்றி இலக்கங்கள் 12 14 46 55 — ஆங்கில எழுத்து D

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 54,882,024

6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

தொ. பே. : 0112 333 546/47

Web: www.dlb.lk

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1243 — நிறம் ஊதா

சீட்டிழுப்பு திகதி 12.10.2020 — தினம் திங்கட்கிழமை

வெற்றி எழுத்தும் இலக்கங்களும் N 18 28 59 65

SUPER 500 விசேட இலக்கம் 5 1 6 7

53,517,142

அபிவிருத்தி லொத்தர் சபை

தொலைபேசி: 0112 333 546-47

## திருத்தங்கள் இறுதி வரையில் சேர்க்கப்பட்டு

# 20 ஆவது திருத்தச் சட்டம் சட்டமாக்க நடவடிக்கை எடுக்கப்படும்

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

**அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் தொடர்பான பாராளுமன்ற குழு நிலை விவாதத்தின் போது உயர் நீதிமன்றம் முன்வைத்துள்ள யோசனைகயில் உள்ள யோசனைகள் மற்றும் தேவையான திருத்தங்கள் இறுதி வரையில் சேர்க்கப்பட்டு சட்டமாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

20ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் முடிவு சபாநாயகருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றம் கூடும் போது சபாநாயகர் அதனை சபைக்கு அறிவிப்பார். இதன் பின்னர் தேவையான நேரத்தில் 20 ஆவது திருத்தச் சட்டத்தை விவாதத்திற்கு எடுக்க முடியும்.

இரண்டாம் முறை வாசிப்பின் போது திருத்தங்களை உள்ளடக்க முடியும். விவாதம் நடத்தப்படுவது, எத்தனை நாட்கள் விவாதம் நடத்தப்படும் என்பன கட்சித் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற குழுவினால் தீர்மானிக்கப்படும்.

தேவை என கருதும் அனைத்து திருத்தங்களும் புதிய வரைபில் சேர்க்கப்பட்டு, சட்டமாக்கப்படும். இதனடிப்படையில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் தேவை இருக்காது எனவும் ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். (ம-03)

## ஒரு நபரிலி...

யாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸைப் பற்றி ஆராய்ந்து வரும் மருத்துவ வல்லுநர்கள், தற்போது பரவிவரும் வைரஸின் தீவிரம் மிக அதிகமாக இருப்பதாகவும், அது வேகமாகவும் எளிதாகவும் பரவக்கூடுமெனக் கண்டறிந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சின் பேச்சாளர், மருத்துவர் ஜெயருவன் பண்டார தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

எனவே, வைரஸ் பரவாமல் இருக்க அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்றும் சுகாதார வழிகாட்டுதல்களை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என்றும் அவர் பொதுமக்களை கேட்டுக்கொண்டார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய சுகாதார அமைச்சின் தனிமைப்படுத்தப்பட்ட பிரிவின் பணிப்பாளர் மருத்துவர், பாலிதா கருணபிரேம, நாட்டில் கோவிட் - 19 நோய்க்கு சிகிச்சை வழங்கும் திறனில் 70 சதவீதம் இப்போது நோயாளிகள் நிறைந்ததாக உள்ளது என்று குறிப்பிட்டார். (ம-3)

## 15 பவுண்...

ளது.

நேற்றிரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

முகத்தை துணியால் மறைத்துக் கொண்டு வீடு புகுந்த இனந்தெரியாத மூவர் வீட்டில் வசித்த வயோதிபர்களான கணவன், மனைவியை ஓரிடத்தில் கட்டிப்போட்டு இருவரின் வாய்களையும் துணியால் கட்டிவிட்டு வீட்டிலிருந்த தாலிக்கொடி உட்பட பல நகைகளை திருடிக்கொண்டு தப்பிச்சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் 10 பவுண் தாலிக்கொடியும், 4 பவுண் சங்கிலியும், ஒரு பவுண் மோதிரமும், ¾ பவுண் தோடும் மற்றும் 25000 ரூபா பணமும் களவாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)


**வேலை வாய்ப்பு**

ஆய்வு நிறுவனம் ஒன்றுக்கு பணிநிலை வெற்றிடம் காணப்படுவதால் தகுதியானவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். (C-516)

( ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். )

சந்தை ஆய்வில் ( Marketing Research ) முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சுயவிபரக் கோவையை மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

E-mail : research2020agencyinfo@gmail.com

Tel : 077 454 2175

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் இராச வீதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (4250)

பிரித்துக் கொடுக்கப்படும்.

( தரகர் தேவையில்லை )

077 468 3354

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம், பரமேஸ்வரா சந்திக்கு அருகாமையில் சிவன்-அம்மன் வீதியில் 4 பரப்புக் காணி உள்ளது. பிரித்துக் கொடுக்கப்படும். ஒரு பரப்பின் விலை அறுபது இலட்சம் ரூபாய்.

நொதேர்ண் வைத்தியசாலை அருகாமை (4250)

( தரகர் தேவையில்லை )

077 805 1655

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் இராச வீதி, கொம்பன் வீதியில் 8 பரப்புக் காணி. 2 பரப்புக் காணியுடன் வீடும் விற்பனைக்கு உண்டு.

மாசுவன் சந்தி அருகாமையில் (4250)

( தரகர் தேவையில்லை )

077 805 1655

**மணமகள் தேவை**

இலங்கையில் பிறந்து Switzerland இல் நிரந்தரமாக வசிக்கும் யாழ். இந்து கௌரவ குடும்பப் பெற்றோர் தமது 48 வயதுடைய சுயதொழில் புரியும் மகனுக்கு நற்பண்புள்ள, அழகிய மணப் பெண்ணைத் தேடுகிறார்கள். மணமகளின் ஜாதகம் மற்றும் சமீபத்திய புகைப்படம் மற்றும் ஏனைய விபரங்களுடன் பின்வரும் மின்னஞ்சலுடன் தொடர்பு கொள்ளவும். (4204)

Jeyaratnam1988@gmail.com 077 219 4331

**அமெரிக்கா லொத்தர் விசா**

2021ம் ஆண்டுக்கான விசா பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

விசா மற்றும் பொதிகள் சேவை

LANKA CARGO WORLDWIDE EXPRESS

315, Kasthuriyar Veethy, Jaffna. (4391)

Tel : 076 485 4092

**உதவியாளர் தேவை**

யாழ். பிறவுண் வீதியில் வசிக்கும் சிறிய குடும்பம் ஒன்றிற்கு 40 வயதிற்கு மேற்பட்ட சமையல் உதவியாளர் (பெண்) தேவை.

தொடர்பு (4240)

077 869 5354

**அமெரிக்க லொத்தர் விசா**

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன (C-308)

2022ல் நீங்களும் அமெரிக்காவில்..

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் 0768226241

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்

குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள் — விண்ணப்ப முடிவு திகதி 10-11-2020

வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | நெல்லியடி | சாவகச்சேரி | திருகோணமலை |
|---|---|---|---|---|
| 0768226243 | 0768226240 | 0776699892 | 0768226242 | 0768226237 |
| மானிப்பாய் | சுன்னாகம் | புதுக்குடியிருப்பு | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
| 0768226238 | 0764550670 | 0764550673 | 0768226230 | 0776697960 |

V2 Travels www.facebook.com/v2tandt

**பணி நிலை வெற்றிடம்**

எமது வைத்தியசாலைக்கு கீழ்க்காணும் பணிகளுக்கு வேலையாட்கள் தேவை.

* பொதுசன தொடர்பு உத்தியோகத்தர் PRO ( Public Relations Officer )
* வரவேற்பாளர் Receptionist
* சுத்திகரிப்பு தொழிலாளர்கள் (ஆண்/பெண்) House Keeping Staff (Male / Female)

நேர்முகப் பரீட்சை நாளை (14.10.2020) புதன் மற்றும் நாளை மறுதினம் (15.10.2020) வியாழன். முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். (C-511)

வீனஸ் விசேட வைத்தியசாலை (தனியார்) வரையறுக்கப்பட்டது.

136, பலாலி வீதி, கந்தர்மடம் - யாழ்ப்பாணம்.

021 222 4172, 021 222 8470, 076 255 5529

**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS

பிரான்ஸ் / ஜெர்மனி நெதர்லாந்து / சுவிஸ் 1150 /= Kg

0768226240

எமது நேரடிக்கிளைகள் (C-308)

யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.